தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை
விலை ரூ. 20/-
மலர் 25
இதழ் 12
ஏப்ரல் 2024

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்

வறுமை ஒழிப்பு செயல்பாடுகள்

முனைவர். **ப. செந்தில்குமார்,** இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

பெண்களாலும் சாதிக்க முடியும், அனைத்துத் துறைகளிலும் ஈடுபட்டு அதில் வெற்றியைப் பெற முடியும் என்பதை உலகிற்கு உணர்த்திய சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களாகிய உங்களுடன் எனது கருத்துகளைப் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

“அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு” என்ற சிறு கூட்டுக்குள் அடங்கி, சமையல் அறையிலேயே முடங்கிக் கிடந்த பெண்களை, குழுக்களாய் ஒன்றிணைத்து, பல்வேறு தொழில் பயிற்சிகளை அளித்து, தொழில் முனைவோர்களாக உயர்த்தி, வீட்டிற்கும், நாட்டிற்கும் சிறப்புகள் பல தேடித்தரும் அளவிற்கு அவர்களை உயர்த்தியதற்கு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அயராத பணிகளும் ஒரு காரணமாகும்.

எனினும் பெண்களின் முன்னேற்றத்திற்கு சில தடைக்கற்கள் ஆங்காங்கே இன்றும் காணப்படுகின்றன. இத்தகைய தடைகளை தகர்த்தெறிந்து பெண்கள் அனைத்து நலன்களையும் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் செயல்பட்டு வருகின்றனர் என்பதை அறியும் போது மிகவும் பெருமையாக உள்ளது.

தங்கள் கிராமத்தைத் தவிர வெளி உலகையே அறியாத சுய உதவிக் குழுக்களின் பெண்கள், இன்று மாவட்டம், மாநிலம், நாடு என அனைத்தையும் கடந்து வெளிநாடுகளிலும் தங்களின் வெற்றி முத்திரையை பதித்துள்ளனர் என்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தின் வெற்றிக்கு மகளிர் சுய உதவிக் குழுக்களான உங்களின் பங்களிப்புதான் முக்கிய காரணம் என்பதில் எவ்வித மாறுபட்ட கருத்தும் இல்லை.

ஒரு செயல் வெற்றியடைய அயராத உழைப்பும் விடா முயற்சியும் தேவை. அந்த அயராத உழைப்பை, விடா முயற்சியை மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களான உங்களிடம் நான் காண்கிறேன். அதற்காகப் பெருமைப்படுகிறேன். இருப்பினும் நாம் இன்னும் அடைய வேண்டிய இலக்குகளுக்காக நமது செயல்களை சற்றும் தொய்வின்றி மேற்கொள்ள வேண்டும். உங்களின் செயல்பாடுகளுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் துணை நிற்கும் எனக் கூறி, தேர்தலில் வாக்களிப்பது நமது ஜனநாயக கடமை. அதனை தவறாது நிறைவேற்ற வேண்டும் என்று சுய உதவிக் குழுவினரான உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் குடும்ப உறுப்பினர்களையும் தவறாது வாக்களிக்க ஊக்கப்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்!!!

அன்புடன்,

(ப. செந்தில்குமார்)

திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

மாதந்தோறும் முற்றம் இதழின் வாயிலாக உங்களை சந்தித்து, பல்வேறு கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வது மகிழ்ச்சியை தருகிறது.

பெண்களாகிய நீங்கள் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும் என்பது அனைவரும் அறிந்ததுதான். அதன் காரணமாகத்தான் இன்று நான் எனது மனதில் தோன்றிய கருத்துகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். மகளிர் தினமான மார்ச் 8ஆம் தேதி அன்று அனைத்துப் பெண்களும் மகளிர் தினத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடியிருப்பீர்கள். நமது தலைமை அலுவலகத்திலும் மற்றும் அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளிலும் மகளிர் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்களின் சாதனைகளையும், படைப்புகளையும் எடுத்துக் கூற வேண்டுமென்றால் ஏராளமானவற்றை கூறலாம். பெண்கள் அடிமைகளாகவும், படிப்பறிவற்றவர்களாகவும் இருந்த நிலை மாறி, இன்று அனைத்துத் துறைகளிலும் அவர்களின் பங்களிப்பு மிக முக்கியமான நிலையில் உள்ளது. கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம், பொறியியல், ஆராய்ச்சி, நிர்வாகம், காவல், பொது வாழ்வு உள்ளிட்ட பல துறைகளில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக இன்று சாதனைகள் பலவற்றைப் படைத்து வருகின்றனர். பெண்கள் மேலும் மேலும் பல வெற்றிகளைப் பெற்று, முன்னேற்றத்திற்கான பாதையில் தொடர்ந்து வெற்றி நடைபோட வேண்டும்.

இந்த இதழ் உங்கள் கைகளில் கிடைக்கும் நேரத்தில் நமது நாட்டின் பாராளுமன்றத் தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட்டு தேர்தல் பரபரப்பு துவங்கி விடும். நம் தாய்த் திருநாட்டின் ஜனநாயகத் திருவிழாவான தேர்தலில் வாக்களிக்க வேண்டியது இந்தியக் குடிமக்களாகிய நமது ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

வாக்களிப்பது நமது கடமை. அதை அவசியம் செய்ய வேண்டும். நாம் அளிக்கும் வாக்கானது நம் நாட்டையும், நம்மையும் ஆட்சி செய்பவர்களை தேர்வு செய்கிறது என்பதை கருத்தில் கொண்டு நீங்கள் உங்கள் வாக்குகளை செலுத்த வேண்டும். நாம் அளிக்கும் வாக்கானது நம்மையும், நம் நாட்டையும் வளர்ச்சி பெற வைக்கும் என்பதை உணர்ந்து உங்களின் வாக்குகள் இருக்க வேண்டும். நம் கையில் வைக்கப்படும் மையானது நமது கடமையை சரியாக செய்வதை உணர்த்தும். எனவே அனைவரும் தவறாமல் வாக்களியுங்கள்.

சுய உதவிக் குழு மகளிர் என்றாலே மற்றவர்களின் பாராட்டுகளுக்கு உரியவர்கள் என்பதை மனதில் வைத்துக் கொண்டு செயல்படுங்கள். உங்களின் அனைத்து செயல்பாடுகளுக்கும் மகளிர் திட்டம் என்றும் துணையாக இருக்கும்.

நன்றி. வணக்கம்

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

(ச. திவ்யதர்சினி)

திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

சுய உதவிக் குழு மகளிரின் தோழியான முற்றம் இதழின் வாயிலாக மாதந்தோறும் உங்களை சந்திப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

பெண்களின் வாழ்வில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும், அவர்களின் திறன்களை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகவும், பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்பதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், வறுமையை ஒழிப்பதற்காகவும் சிறு அமைப்பாக உருவான சுய உதவிக் குழு இயக்கமானது இன்று மிக மிகப் பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளது. இந்த வளர்ச்சிக்குக் காரணம் உங்களின் செயல்பாடுகளே. தடைகளைத் தகர்த்தெறிந்து, எதிர்ப்புகளை சமாளித்து, எதையும் துணிச்சலுடன் எதிர்கொண்டு, இன்று அனைத்துத் தரப்பின் பாராட்டுதலுக்கும் உரியவர்களாக சுய உதவிக் குழு மகளிர் உள்ளனர்.

பல்வேறு பயிற்சிகள், தொழில் முனைப்புகள், வங்கிக் கடன் இணைப்புகள், விவசாயத்தில் ஈடுபாடு, பயனுள்ள பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை, குழுக் கூட்டம், கூட்டமைப்பு உருவாக்கம், கிராம வறுமை ஒழிப்புச் சங்க செயல்பாடுகள் என ஊக்கத்துடன் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்களின் மகளிர் சமுதாய நன்மைக்கும் பாடுபட்டு வருகின்றனர் என்பது பாராட்டுக்குரியது.

சுய உதவிக் குழுக்களுக்கு அதிக அளவில் வங்கிக் கடன் வழங்குதல், பல்வேறு தொழில் பயிற்சிகள் வழங்கி, வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தருதல், சுய தொழில் முனைவோருக்கான பயிற்சிகள் வழங்குதல், உற்பத்தி பொருட்களுக்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல், இயற்கை வேளாண் பொருட்களை விளைவிப்பதற்கு பயிற்சிகள் வழங்குதல் போன்றவை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதனை அனைத்து மகளிர் சுய உதவிக் குழுவினரும் ஆக்கப்பூர்வமான முறையில் பயன்படுத்தி, தங்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கி வருவது மிகவும் சிறப்பு.

நீங்கள் பெற்றுள்ள வெற்றி மிகப் பெரியதாக இருப்பினும், உங்களின் பயணம் மேலும் தொடர வேண்டும். உங்களின் செயல் மற்றவர்களுக்கு முன்னுதாரமாக இருக்க வேண்டும். உங்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் துணை நிற்கும் என்பதை பெருமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,
ஸ்ரேயா
(ஸ்ரேயா பி சிங்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

tncdwH
Tncdw State
www.Tncdw.org
Tncdwofficial

“மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்ட்ராகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்..”

குறளும் – பொருளும்

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளீர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்

– (குறள்: 615)

தன்னலம் விரும்பாமல், தான் மேற்கொண்ட செயலை நிறைவேற்ற விரும்புகின்றவர் தன்னைச் சூழ்ந்துள்ள சுற்றத்தார், நண்பர்கள், நாட்டு மக்கள் ஆகிய அனைவரின் துன்பம் துடைத்து, அவர்களைத் தாங்குகிற தூண் போன்றவர்.

உள்ளே...

7 வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி

22 உடல் நலம் காப்போம்...


8 எங்கள் வாக்கு... எங்கள் உரிமை..!

24 சட்டம் என்ன சொல்கிறது?

14 தினம்... தினம்...

34 சமைப்போம்... சுவைப்போம்

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●
முற்றம்
விலை ரூ. 20/- • மலர் 25 • இதழ் 12 • ஏப்ரல் 2024

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **பி. எஸ். விஜயலெஷ்மி** பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திரு. **ச. இராஜேந்திரன்,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்
ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

அரசியல் அமைப்பு சட்டத்தில்
பெண் உரிமை...

அன்புள்ள வாசகர்களுக்கு,

சென்ற மாதம் அகில உலக பெண்கள் தினம், அகிலம் முழுவதும் பரவலாகவும், பல இடங்களில் மிக சிறப்பாகவும் கொண்டாடப்பட்டது என்பதை ஊடகங்கள் வாயிலாக நாம் அறிந்து கொண்டோம். இந்த பெண்கள் தினத்தின் முக்கியத்துவமும், பெண்களின் உரிமைக் குரலும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை காணும்போது பெண்களிடையே பெரும் எழுச்சி ஏற்பட்டுள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பிறகு இந்திய அரசியல் அமைப்பு சட்டம் உருவாக்கப்பட்டது. இந்த அரசியல் அமைப்பு சட்டம் உருவாவதற்கு முன்பு, பல்வேறு தத்துவங்களையும், நம்பிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்டே ஆட்சி அதிகாரங்கள் செலுத்தப்பட்டு வந்தன. ஆனால், சுதந்திரத்திற்கு பிறகு உருவாக்கப்பட்டுள்ள அரசியல் அமைப்பு சட்டம் மட்டுமே ஆட்சி அதிகாரத்திற்கு அடிப்படையானதாகும். இந்த அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிராகவோ அல்லது அரசியல் அமைப்பு சட்டத்தில் இல்லாத எதையுமே செய்து விட முடியாது.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் அமைப்பு சட்டத்தினை வடிவமைப்பதற்கான குழுவின் தலைவராக டாக்டர். அண்ணல் அம்பேத்கார் அவர்கள் இருந்தபொழுது, பெண்களுக்கான உரிமைகளை அரசியல் அமைப்பு சட்டத்தில் அவர் கொண்டு வர பெருமுயற்சி மேற்கொண்டார். ஆனால், பல உறுப்பினர்களிடமிருந்து பலத்த எதிர்ப்பு கிளம்பிய காரணத்தால் அப்பதவியிலிருந்து விலகினார்.

இருப்பினும், அதன் பிறகு பிரதமராக பதவியேற்ற திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் மீண்டும் டாக்டர். அண்ணல் அம்பேத்கார் அவர்களை அழைத்து சட்ட வடிவமைப்பு பணியை தொடருமாறு கேட்டுக் கொண்டார். அதன் பிறகு அரசியல் அமைப்பு சட்டத்தில் பெண்களுக்கான சொத்துரிமை, கல்வி உரிமை, பெண்களுக்கான அதிகாரம், பெண்கள் பணிபுரியும் இடங்களில் போதிய வசதிகள், பெண்களுக்கான இட ஒதுக்கீடு, பெண்கள் பணிபுரிவதற்கான கால வரையறை மற்றும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு ஆகியவற்றை சட்டங்களாக கொண்டு வந்தார்.

ஏப்ரல் மாதத்தில் வரும் அவருடைய பிறந்த நாளில் பெண்கள் தங்களுக்காக போராடிய அவரை நன்றியுடன் நினைவு கூறுகின்றனர்.

இப்படிக்கு,



(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் 100% வாக்களிப்போம் விழிப்புணர்வு

திருவண்ணாமலை மாவட்டத்தில் வரும் 19.04.2024 அன்று நடைபெறும் நாடாளுமன்ற தேர்தலில் 100 % வாக்களிப்போம் விழிப்புணர்வு நிகழ்ச்சி (SVEEP) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 22.03.2024 அன்று நடைபெற்றது. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.தெ.பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சுமார் 3000 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் 100 % வாக்களிக்கவும், ஜனநாயக அடிப்படையில் நேர்மையுடன் வாக்களிக்கவும், வண்ணக் கோலத்தில் வரைந்து மெழுகுவர்த்தி ஏற்றியும், தன் புகைப்படம் தாங்கிகளை (Selfi Point) அமைத்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சியர் (வ) திரு.செ.ஆ.ரிஷப், இ.ஆ,ப.,, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. பிரியதர்ஷினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் திட்ட இயக்குநர் திருமதி.நா.செ.சரண்யாதேவி, வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மந்தாங்கனி, உதவி திட்ட அலுவலர்கள், அனைத்து வட்டார இயக்க மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி

தென்காசி மாவட்டத்தில் வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தென்காசி மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் வாக்காளர் விழிப்புணர்வு ஓட்டம், பேரணி, வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக வாக்காளர் விழிப்புணர்வு மெகந்தி போட்டி குத்துக்கல் வலசை வட்டார வணிக வள மையக் கட்டிடத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ.கே.கமல் கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

தேர்தல் விழிப்புணர்வு மாவட்ட பொறுப்பு அலுவலர் / மகளிர் திட்ட இயக்குனர் திருமதி மதி இந்திரா பிரியதர்ஷினி முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் ஏராளமான பெண்கள் கல்லூரி மாணவிகள், முதல் தலைமுறை வாக்காளர்கள் என திரளாக பங்கேற்றனர். நிகழ்ச்சியினை முன்னிட்டு விழா அரங்கில் வாக்காளர் விழிப்புணர்வு சுய புகைப்பட அரங்கு (செல்பி கார்னர்) அமைக்கப்பட்டு இருந்தது. அதில் முதலாவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் புகைப்படம் எடுத்து தொடங்கி வைத்தார்.

எங்கள் வாக்கு... எங்கள் உரிமை..!

மக்களிடம் உள்ள சிறந்த சக்தி வாக்களிப்பதே ஆகும் அதாவது நாட்டின் தலையெழுத்தை மாற்றும் சக்தியே வாக்காளர்களாவர். இத்தகைய வாக்கினை ஒவ்வொருவரும் சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் சிறந்த ஜனநாயக தேசத்தை உருவாக்கி கொள்ள முடியும்.

ஓர் தனி மனிதனது வாக்கானது நாளைய எதிர்காலத்தை தீர்மானிக்கும் சக்தி படைத்ததாகும். அத்தகைய வாக்கினை வீணாக்காமல் உரிய முறையில் வாக்களிப்பது ஒவ்வொரு குடிமகனது கடமையாகும். அந்த வகையில் வாக்களிப்போம் நமது வாழ்வை காப்போம்.

ஜனநாயகத்தில் வாக்களிப்பின் பங்கு

ஓர் நாடானது ஜனநாயகமான நாடாக திகழ வேண்டுமாயின் அங்கு நிச்சயமாக தேர்தல் நடத்தப்பட வேண்டும். மேலும் சுதந்திரமாக வாக்களிக்கும் நிலை உருவாக வேண்டும். நாட்டினுடைய ஜனநாயகம் பேணப்பட வேண்டுமாயின் ஒவ்வொரு குடிமகனும் வாக்களிப்பதை பெருமையாக நினைத்து சிறந்த ஆட்சியை ஏற்படுத்த முன் வர வேண்டும். தனது நாட்டின் மேல் பற்றுடைய மக்கள் சிறந்த ஆட்சிக்கு வழிவகுப்பர். இதன் காரணமாகவே ஜனநாயகம் பேணப்படுகிறது.

வாக்களிப்பின் முக்கியத்துவம்

வாக்களிப்பது ஒவ்வொருவரது உரிமை என்ற அடிப்படையில் சிறந்த நபருக்கு வாக்களிப்பதன் மூலமே சிறந்த ஆட்சியை ஏற்படுத்த முடியும். அதாவது சமூகத்தில் சிறந்த தலைவனை தேர்ந்தெடுக்க வாக்களித்தல் முக்கியத்துவம் வாய்ந்ததொரு முறையாகும்.

வாக்களிப்பதன் ஊடாக மக்களுடைய தேவைகள் நிறைவேற்றப்படுவதோடு சமூகமும் உயர்வடைய வழிவகுக்கிறது. அதேபோன்று புதிய சட்டங்களை கொண்டு வருவதற்கான சிறந்த வழியாகவும் வாக்களிப்பு திகழ்கின்றது.

வாக்களிப்பது நமது உரிமை

தேர்தல் காலங்களின் போது வாக்களிப்பது நமது பிரதான உரிமையாகும். இத்தகைய உரிமையை நிலைநாட்ட சிறந்த எதிர்காலத்தை நோக்காக கொண்டு வாக்களித்தல் வேண்டும். இதன் மூலமாகவே சிறந்ததொரு ஆட்சியினை நம்மால் ஏற்படுத்த முடியும். ஒவ்வொரு குடிமகனும் இதனை கருத்திற்கொண்டு செயல்பட வேண்டும். மேலும் தவறான ஒருவருக்கு நமது உரிமையை வழங்குவோமேயாயின் நமது எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் என்பதனை உணர்ந்து நமது உரிமை நமது வாக்கே என்ற அடிப்படையில் வாக்களித்தல் வேண்டும்.

இந்தியாவும் வாக்காளர்களும்...

இந்தியாவானது ஓர் பன்முகத்தன்மை கொண்டதொரு நாடாகும். இங்கு பல இன மக்கள் வாழ்கின்றனர். இத்தகைய இந்திய தேச மக்கள் சிறந்த முறையில் வாக்களிப்பானது தேசத்தின் தலையெழுத்தையே மாற்றும் சக்தி கொண்டதாகும்.

இந்தியாவில் 18 வயது பூர்த்தியடைந்த ஒருவர் வாக்களிக்க தகுதி பெற்ற நபராவார். மேலும் வேட்பாளர் பற்றிய விடயங்களை அறிந்து கொள்ளும் உரிமை வாக்காளர் ஒவ்வொருவருக்கும் உள்ளது.

அதேபோன்று சுதந்திரமாகவும் வாக்களிப்பினை மேற்கொள்ள முடியும். மேலும் வேட்பாளரின் சொத்து, குற்ற வழக்கு, அவரது வாழ்க்கை பின்னணி போன்றவற்றை வாக்காளரினால் அறிந்து கொள்ளவும் முடியும். இத்தகைய சிறந்ததொரு வாக்களிப்பு முறையே இந்திய தேசத்தின் சிறந்த ஆட்சிக்கு வழியமைக்கிறது.

நமது நாட்டின் விதியை மாற்றும் சக்தியே வாக்களிப்பு இத்தகைய வாக்களிப்பின் போது நேர்மையை பேணுவது சிறந்த ஆட்சிக்கு வழிவகுக்கும். ஓர் நாட்டின் ஜனநாயகத்தை சிறந்த முறையில் கட்டியெழுப்புவதற்கு பிரதான சக்தியாக வாக்களிப்பே காணப்படுகின்றது. எனவே தவறாது வாக்களிப்போம். எங்கள் வாக்கு எங்கள் உரிமை என்ற ஜனநாயகக் கடமையை நிறைவேற்றுவோம்.



தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்
வறுமை ஒழிப்பு செயல்பாடுகள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் தன்னம்பிக்கை மூலம் மகளிரின் நிலையை மேம்படுத்தும் நோக்கில் 1983 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது.

பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கி, வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, நிதி இணைப்புகளையும் தொழில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தி, பெண்களின் ஆற்றல் மேம்பாட்டை அதிகரித்து, சுய உதவிக் குழு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பின்வரும் முக்கிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)
- தேசிய ஊரகப் பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம் (NRETP)
- தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM)
- தீன்தயாள் உபாத்தியாய கிராமப்புறத் திறன் மேம்பாட்டுத் திட்டம் (DDU-GKY)
- வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP)

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

ஊரக ஏழை மக்களுக்காக வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட நிதி மற்றும் பல்வேறு சேவைகளை முறையாகப் பெற வழிவகை செய்து, குடும்ப வருமானத்தை பெருக்குவதே தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின், நோக்கமாகும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முன்னோடியான மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில், 18 முதல் 60 வயதுக்குட்பட்ட 12-20 பெண்களைக் கொண்ட சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அக்குழுவிற்கான வங்கிக் கணக்குகள் துவக்கப்பட்டு, அதில் குழுவின் உறுப்பினர்கள் தங்களால் இயன்ற தொகையை தவறாது சேமிக்கின்றனர். DAY-NRLM திட்டத்தின் மூலம் வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு, சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் போன்ற சமூகம் சார்ந்த அமைப்புகளை உருவாக்குவதன் மூலம் அரசின் திட்டங்கள் மாநிலத்தின் கடைக்கோடியில் வசிக்கும் ஏழை மக்களைச் சென்றடைவதற்காக, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டது.

சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன கட்டமைப்பு (SM&IB)

சமூக ஒருங்கிணைப்பானது தகுதியுள்ள மகளிரை சுய உதவிக் குழுக்களில் இணைத்து அல்லது குழுக்களாக அமைத்து, அவற்றிற்கு நிதி மற்றும் ஜனநாயக ரீதியாக முடிவு எடுப்பதன் மூலம் ஏழைகளுக்கான அமைப்பாக செயல்படுவதை உறுதி செய்கிறது. முறையான கூட்டங்களை நடத்துதல், முறையான சேமிப்பு, உள்கடன் வழங்குதல், முறையான உள்கடன் திருப்பம் மற்றும் முறையான கணக்கு பதிவேடுகளை பராமரித்தல் ஆகிய 5 முக்கிய கோட்பாடுகள் சுய உதவிக் குழுக்களால் கடைபிடிக்கப்படுகிறது.

சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் மிகவும் ஏழை, ஏழை, மாற்றுத் திறனாளிகள், நலிவுற்றோர், பழங்குடியினர், முதியோர், திருநங்கையர் மற்றும் விளிம்பு நிலையிலுள்ள மக்கள் அனைவரையும், மக்கள் பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு மூலம் அடையாளம் காணப்பட்டு, விடுபட்ட ஏழைக் குடும்பங்களிலுள்ள மகளிரை ஏற்கனவே உள்ள சுய உதவிக் குழுக்களிலோ அல்லது புதியதாக அமைக்கப்படும் சுய உதவிக் குழுக்களிலோ இணைக்கப்படுகின்றனர்.

சமுதாயம் சார்ந்த அமைப்புகள்

இவ்வியக்கத்தினை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்பு சங்கம், வட்டார அளவிலான கூட்டமைப்பு, மக்கள் கற்றல் மையம் போன்ற சமுதாயம் சார்ந்த அமைப்புகளை சார்ந்துள்ளது. இத்திட்டத்தின் நோக்கங்களை அடைந்திட இந்த அமைப்புகளானது ஒரு வலுவான தூணாக செயல்படுகிறது.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்

கிராம வறுமை ஒழிப்புச் சங்கமானது, இலக்கு மக்கள் மற்றும் நலிவுற்றோரை உள்ளடக்கிய தன்னாட்சி அமைப்பாகும். இச்சங்கம் 11 முதல் 19 உறுப்பினர்களை உள்ளடக்கியதுடன், இலக்கு மக்கள் குடும்பங்களை கண்டறிந்து, அவர்களை வறுமையில் இருந்து மீட்பதற்காக தனிநபர் கடன் வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், இது அவர்களின் நலிவு நிலையைக் குறைக்க உதவுகின்றது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

ஊராட்சி அளவில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. ஊராட்சியிலுள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களும் கூட்டமைப்பின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975-ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளானது, திட்டத்திற்கும் கிராம மக்களுக்கும் இடையே ஒரு முக்கியமான இணைப்பு பாலமாக செயல்படுகிறது. அதன் முக்கிய செயல்பாடாக குறைந்த வட்டியில் கடன்கள் மற்றும் அரசு திட்டங்களின் பயன்களை பெற்று தருவதாகும்.

சமூகத் தணிக்கை குழு

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்கு 5 பொதுக் குழு உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கண்காணிப்பு குழுவே சமூகத் தணிக்கை குழு ஆகும். இக்குழுவானது, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகளை கண்காணித்து கிராம சபைக்கு அறிக்கையாக சமர்ப்பிக்கும்.

வட்டார அளவிலான கூட்டமைப்பு

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாக கொண்டு 388 வட்டாரங்களிலும் அமைக்கப்பட்ட, பதிவு செய்யப்பட்ட ஒரு அமைப்பாகும். இந்த அமைப்பானது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகள் அனைத்தையும் வட்டார அளவில் செயல்படுத்துகிறது. கூடுதலாக சமுதாய வளப்பயிற்றுநர்களுக்கு வட்டார அளவிலான திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் மையமாகவும் செயல்படுகிறது.

சமுதாய முதலீட்டு நிதி

சமுதாய முதலீட்டு நிதி 6 மாதங்கள் நிறைவடைந்த சுய உதவிக் குழுக்களின் பொருளாதார செயல்பாட்டிற்கு கடனாக வழங்கப்படுகிறது. ஒரு சுய உதவிக் குழுவிற்கு அதிகபட்சமாக ரூ.1.50 இலட்சம் கடன் தொகையாக குறைந்த வட்டி விகிதத்தில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் வழங்கப்படுகிறது. இந்நிதியை அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திய பிறகு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு திரும்ப பெறப்பட்டு, அதே கிராம ஊராட்சியிலுள்ள பிற சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக சுழற்சி முறையில் மீண்டும் வழங்கப்படுகிறது.

நலிவு நிலை குறைப்பு நிதி

நலிவு நிலை குறைப்பு நிதியானது நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான உணவு பாதுகாப்பு, வாழ்வாதார செயல்பாடுகள் மற்றும் எதிர்பாராத செலவினங்களுக்கு (உடல் நலக்குறைவு, எதிர்பாரா மருத்துவ செலவு போன்றவை) பயன்படுத்தப்படுகிறது. கடன் தொகையாக அதிகபட்சமாக ரூ.25,000/- வரை குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்படுகிறது.

சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி

மூன்று மாதம் நிறைவு பெற்று தரமதிப்பீடு செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக குழு ஒன்றுக்கு ரூ.15,000/- வீதம் வழங்கப்படுகிறது. இச்சுழல் நிதியானது அவர்களை ஊக்குவிப்பதற்கு ஒரு காரணியாகவும், அவர்களின் சேமிப்போடு தொகுப்பு நிதியை அதிகப்படுத்தி அதிகமான உறுப்பினர்கள் உள்கடன் பெறுவதற்கும் வழிவகை செய்கிறது.

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு (SHG – BLP)

சுய உதவிக் குழுக்கள் அவர்களின் தேவைகளின் அடிப்படையில், தவணை கடன் (Term Loan) அல்லது ரொக்கக் கடன் (Cash Credit limit) அல்லது இரண்டு வகை கடன்களையும் பெற்றுக் கொள்ளலாம். தவணை கடனானது குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் செலுத்தப்பட வேண்டும். ரொக்கக் கடனானது, குறைந்தபட்சம் ரூ.6.00 இலட்சம் என்ற அளவில் நிர்ணயம் செய்யப்பட்டு, வருடத்திற்கு ஒரு முறை வரையறுக்கப்பட்ட அளவின்படி (Yearly Drawing Power) 3 ஆண்டுகள் வரை திரும்ப செலுத்த அனுமதிக்கப்படுகிறது.

குறு தொழில்களுக்கான கடன் உத்திரவாத நிதியானது (CGFMU), முதிர்ச்சி அடைந்த சுய உதவிக் குழுக்களின் நிதி தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு, ரூ.10.00 இலட்சம் முதல் ரூ.20.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

காப்பீடு மற்றும் ஓய்வூதிய திட்டங்கள்

சுய உதவிக் குழு குடும்பங்கள் பல்வேறு இடர்பாடுகளால் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில், அவர்களை ஒன்றிய மற்றும் மாநில அரசின் காப்பீடு மற்றும் ஓய்வூதிய திட்டங்களில் இணைப்பது அவசியமாகிறது. 100 தகுதியுள்ள அனைத்து சுய உதவிக்குழு உறுப்பினர்களையும் ஆயுள் காப்பீடு, விபத்துக் காப்பீடு மற்றும் உடல்நலக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சேர்ப்பதே அரசாங்கத்தின் முயற்சியாகும். தகுதியான நபர்கள், இறப்பு/விபத்து ஏற்படும் பட்சத்தில் இழப்பீடு தொகையினை கண்காணித்து பெற்று வழங்குவதற்கு சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். அமைப்பு சாரா நிறுவனங்களில் பணிபுரியும் மகளிர் அடல் பென்சன் யோஜனா (APY) திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

வாழ்வாதார மேம்பாடு

ஊரகப் பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழு குடும்பங்களின் தொடர் மற்றும் நிலையான வருமானத்தை உறுதிப்படுத்த, ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வாழ்வாதார நடவடிக்கைகள் மேற்கொள்வதை வாழ்வாதார இயக்கம் முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது. மேலும், வறுமை மற்றும் சமத்துவமின்மையை குறைக்கும் வகையில் ஒவ்வொரு சுய உதவிக் குழுவின் குடும்பத்தின் ஆண்டு வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கு இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வாழ்வாதார முயற்சிகள் பண்ணை நடவடிக்கைகள், பண்ணை சாரா நடவடிக்கைகள் மற்றும் சந்தைப்படுத்தும் நடவடிக்கைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

பண்ணை வாழ்வாதார நடவடிக்கைகள்

பண்ணை மற்றும் பண்ணை சார்ந்த நடவடிக்கைகள், பயிர் உற்பத்தி, முதல் நிலை மதிப்புக் கூட்டுதல் மற்றும் மதிப்புச் சங்கிலி மேலாண்மை ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகின்றன. இவ்வியக்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளால் சுய உதவிக் குழுவை சேர்ந்த வேளாண் மகளிர், விவசாயத் தொழிலாளர்களாக இருந்து பயிர் சாகுபடியாளராகவும், விவசாய தொழில் முனைவோராகவும் முன்னேறி வருகின்றனர்.

பண்ணை மற்றும் பண்ணை சார்ந்த வாழ்வாதார செயல்பாடுகளின் கீழ்பயிற்சிவழங்குதல்,குழுக்கள்உருவாக்குதல்மற்றும்தொகுப்பு நடவடிக்கைகள் மூலம் சிறந்த பண்ணை செயல்பாடுகளை மேற்கொண்டு அதிக மகசூல் மற்றும் உரிய விலை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தரிசு நிலங்களில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்கு வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையின் முதன்மைத் திட்டமான அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்துடன் இணைந்து தொகுப்பு அணுகுமுறை மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

உற்பத்தியாளர் குழுக்கள்

ஒரே வகையான பயிர் சாகுபடியில் ஈடுபட்டு ஒரே மாதிரியான வாய்ப்புகள் மற்றும் இடர்பாடுகளை சந்திக்கும் விவசாயிகளின் உற்பத்தி திறன் மற்றும் இலாபத்தை மேம்படுத்துவதற்காக குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டு அவர்களுக்கு ரூ.2.00 இலட்சம் செயல்பாட்டு மூலதனம் மற்றும் உட்கட்டமைப்பு உதவிக்காக துவக்க நிதியாக வழங்கப்படுகிறது. அவர்களுக்கு, புதிய விவசாய சம்பந்தமான தொழிநுட்பங்கள், சிறந்த செயல்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகள் குறித்த பயிற்சியும் வழங்கப்படுகிறது. தொழில் மேம்பாட்டிற்கான ஆதரவும் வழங்கப்படுகிறது.



ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்புகள்

பண்ணை மற்றும் பண்ணை சார்ந்த நடவடிக்கைகளை ஒத்திசைவுடன் சீரமைக்கும் முறையின் பலனை பெறுவதற்காக, விவசாயம் சார்ந்த பண்ணை நடவடிக்கைகள் கால்நடை வளர்ப்புடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படுகின்றன. இதில், உயிர் உரம் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தி செலவுகள் குறைக்கப்பட்டு பல்வேறு வருமானம் ஈட்டும் வாய்ப்புகளும் ஏற்படுத்தப்படுகின்றன. 2 முதல் 3 கிராம ஊராட்சிகளிலிருந்து, 250 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தொகுப்பாக ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரு தொகுப்புக்கு ரூ.20.00 இலட்சம் வீதம் வாழ்வாதார சேவை மையம் அமைக்கவும், கால்நடைகள் வாங்கவும், ஊடுபயிர்கள் பயிரிடவும், இயற்கை இடுபொருட்கள் அலகு அமைக்கவும், இயந்திர வாடகை மையம் ஏற்படுத்தவும், சந்தைப்படுத்துதல் மற்றும் வணிக குறியீடு உருவாக்குவதற்கான பயிற்சிகள் அளித்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக வழங்கப்படுகிறது.

கருவி வங்கிகள்

வெவ்வேறு பயிர்களுக்குத் தேவையான விவசாயக் கருவிகள் மற்றும் இயந்திரங்களை ஒரே இடத்தில் கிடைக்கச் செய்து விவசாயப் பணிகளுக்கு நியாயமான வாடகைக்கு வழங்கிட கருவி வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இயற்கை வேளாண் தொகுப்புகள்

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு, இயற்கை வேளாண் தொகுப்புகளை உருவாக்குவதன் மூலம் வேளாண்-சூழலியல் நிலைக்கு உகந்த விவசாய முறை மற்றும் இரசாயனங்கள் இல்லாத இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி செய்யப்படும் பாரம்பரிய விவசாயத்திற்கு புத்துயிர் அளிக்க முயற்சிக்கப்படுகிறது.

இயற்கை விவசாயத்தில் ஆர்வமுள்ள அடுத்தடுத்த கிராமங்களைச் சேர்ந்த 50 விவசாயிகள் கொண்ட இயற்கை விவசாய தொகுப்பிற்கு திறன் மேம்பாட்டு பயிற்சி, பதிவு செய்தல், சான்றிதழ்கள் பெறுதல் மற்றும் இயற்கை இடுபொருள் அங்காடி அமைப்பதற்காக ரூ.6.00 இலட்சம் வழங்கப்படுகிறது. சுற்றுச்சூழலுக்கு குறைந்த பாதிப்பை ஏற்படுத்தும் அதிக மதிப்புள்ள இயற்கை விளைபொருட்களை உற்பத்தி செய்ய ஒருங்கிணைந்த பண்ணை முறையும் உருவாக்கப்படும்.

சிறுதானியம் குறித்த விழிப்புணர்வு

சிறுதானியங்கள் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிப்பதால் அவை ஊட்டச்சத்து நிறைந்த தானியங்கள் என உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, சிறுதானிய உற்பத்திக்கு புத்துயிர் அளிக்கும் விதமாக வேளாண்மைத் துறையுடன் இணைந்து உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிப்பது, சிறுதானிய உணவை உண்பதால் ஏற்படும் ஆரோக்கிய நன்மைகள் குறித்து நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், சிறுதானிய மதிப்பு கூட்டு பொருட்களின் உற்பத்தியை ஊக்குவித்தல் மற்றும் புதிய சிறுதானிய பொருட்களை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- தொடரும்

தேசிய குடிமைப் பணிகள் தினம் [ஏப்ரல் 21]

நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமாகக் கருதப்படும் ஐ.ஏ.எஸ். (நிர்வாகம்), ஐ.பி.எஸ். (காவல் துறை), ஐ.எப்.எஸ். (வனத்துறை) அதிகாரிகளை சிறப்பிக்கும் வகையில் இந்தியாவின் தேசிய தினங்களில் ஒன்றாக தேசிய குடிமைப் பணிகள் தினம் (Indian Civil Services Day) ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் 21ஆம் தேதி கொண்டாடப்படுகின்றது.

சிவில் சேவையானது நாட்டின் நிர்வாக இயந்திரத்தை இயக்கும் முதுகெலும்பாக செயல்படுகிறது. அரசின் திட்டங்களை மக்களுக்குக் கொண்டு சேர்க்க வேண்டிய கடமை இந்திய ஆட்சிப் பணிக்கு (Civil Service) உள்ளது. 1947ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் தேதி அன்று டெல்லியில் உள்ள மெட்கால்பே இல்லத்தில் (Metcalfe House), இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் நாட்டின் முதல் குடிமைப்பணி அதிகாரிகளின் முதல் பிரிவினருடன் (First Batch of IAS officer) ஆற்றிய உரையை நினைவு கூர்வதற்காக ஆண்டுதோறும் குடிமைப்பணிகள் தினம் கொண்டாடப்படுகிறது.

உலக பூமி தினம் [ஏப்ரல் 22]

1969-ம் ஆண்டு கலிபோர்னியாவில் மிகப்பெரிய எண்ணெய் கசிவு அதிக சேதத்தை ஏற்படுத்தியது. இதனையடுத்து உலக புவி தினத்தை, ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்க செனட்டரான கெய்லார்ட் நெல்சன் கொண்டு வந்தார். சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை பற்றி மக்களுக்கு தெரியப்படுத்த இந்த தினம் ஒரு நல்வாய்ப்பாக இருக்கும் என அவர் கருதினார். இந்த தினம் 1970-ம் ஆண்டிலிருந்து கடைப்பிடிக்கப்படுகிறது.

காற்று மாசுபாடு, காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல் போன்ற பல சுற்றுச்சூழல் பிரச்சினைகள் உள்ள பூமியில் அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த உலக புவி தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. பூமியைத் தவிர மனிதர்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் வேறுகிரகத்தில் உள்ளதா? என ஆராய்ந்து வரும் நிலையில், நாம் வாழும் பூமியை சுற்றுசூழல் பாதிப்பில் இருந்து பாதுகாக்க தவறிவிட்டோம். சுற்றுசூழலை மேம்படுத்தவும், எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கவும், நலமாக வாழ்வதற்கு ஆரோக்கியமான இடமாக பூமியை மாற்றுவதும்தான் இந்த உலக புவி தினத்தின் நோக்கமாகும். இந்த பூமியில் உள்ள ஒவ்வொரு நபரும் நமது பூமியின் இயற்கை வளங்களை நம்முடைய சந்ததியினருக்கு அளிக்க இந்த நாளில் உறுதியேற்போம்.

தேசிய பஞ்சாயத்து ராஜ் நாள் [ஏப்ரல் 24]

தேசிய பஞ்சாயத்து ராஜ் நாள் (National Panchayati Raj Day) என்பது ஆண்டுதோறும் ஏப்ரல் 24 ஆம் நாளன்று நம் நாட்டில் கொண்டாடப்படும் ஒரு தேசிய நாளாகும்.

1992 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் நாள் பஞ்சாயத்து ராஜ் சட்டம் கொண்டு வரப்பட்டது. பஞ்சாயத்துராஜின் நோக்கம் அதிகாரத்தைப் பரவலாக்குவது. மக்கள் ஆளும் பஞ்சாயத்து அமைப்புகள் அனைத்துமே மிக வலிமையானவை. இதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், தாங்களே நிர்வாகம் செய்யும் உரிமையை பெறுகிறார்கள். அரசு அதிகாரத்தை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து அமைப்புகளுக்கு பரவலாக்கவும், மக்கள் கிராம அளவில் தாங்களே நிர்வாகத்தை நடத்துவதற்கான உரிமை வார்த்தையளவில் இல்லாமல் உண்மையாக நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. மத்திய, மாநில அரசுகளின் அதிகாரிகள் தங்கள் அதிகாரத்தை குறைத்துக் கொண்டு உள்ளாட்சி அமைப்புகளுடன், அதிகாரத்தை பகிர்ந்துகொள்வது அவசியமாக உள்ளது. பஞ்சாயத்துகள் வலுவாக இருந்தால்தான் அரசு நிர்வாகம் சிறப்பாக செயல்படும். இத்தினத்தில் சிறந்த பஞ்சாயத்து தலைவருக்கான விருது வழங்கப்படுகிறது.

DDU-GKY
Deen Dayal Upadhyaya
Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான

வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்

மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான திறன் பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெறவும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் புகார்கள் தெரிவிக்கவும் கீழ்கண்ட தொலைபேசி எண்ணை அழைக்கவும்.

வாழ்வாதார உதவி அழைப்பு எண்

155 330

LIVELIHOOD HELPLINE NUMBER

அனைத்து வேலை நாட்களிலும், காலை 09.30 மணி முதல் மாலை 06.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ugkytn2016@gmail.com

விழிப்புணர்வு அடையாள ஆவணங்களை கவனமாக கையாளுவோம்...

நம் நாட்டு மக்கள் ஒவ்வொருவரைப் பற்றிய விவரங்களையும் முழுமையாக சேகரித்து வைக்கவே ஆதார் கார்டு, பான் கார்டு போன்ற ஆவணங்கள் கொண்டு வரப்பட்டன. இந்த கார்டுகளில் நம் சுயவிவரங்கள் உள்பட கண் விழி மற்றும் கைரேகை போன்ற பதிவுகளும் உள்ளடங்கி உள்ளன. இந்தியாவில் வசிக்கும் ஒருவரை விரைவில் அடையாளம் காண இந்த ஆவணங்கள் அரசுக்கு உதவுகின்றன.

ஆனால், தற்போது அரசு தொடர்பான காரணங்களுக்கு மட்டுமன்றி, வங்கியில் கடன் வாங்குவதில் தொடங்கி மொபைலுக்கு சிம் கார்டு வாங்குவது வரை அனைத்து இடங்களிலும் ஆதார், பான் கார்டுகளின் நகலை வழங்குகிறோம். இந்த அடையாள ஆவணங்களில் நம் சுய விவரங்கள், முகவரிகள் உள்பட நம் பொருளாதாரம், நிதி சார்ந்த அனைத்து விஷயங்களும் இணைந்திருப்பதால், இவற்றை மற்றவர்கள் தவறாகப் பயன்படுத்தி மோசடி செய்வதற்கான வாய்ப்புகள் மிகவும் அதிகம். அதனால் நீங்கள் எங்கெல்லாம் இதுபோன்ற ஆவணங்களை வழங்குகிறீர்கள் என்பதில் அதிக கவனமும் எச்சரிக்கையும் அவசியம்.

சில நிறுவனங்களிடம் நீங்கள் தரும் ஆவணங்கள் உங்களின் அனுமதி இல்லாமலேயே வியாபார நோக்கத்துக்காக மற்ற நிறுவனங்களுக்கும் பகிரப்படுகின்றன. நீங்கள் ஒரு வங்கியில் கணக்குக் தொடங்கியிருக்கலாம். அதற்கு உங்கள் இ-மெயில் ஐ.டி, மொபைல் நம்பர் உள்பட அனைத்துத் தகவல்களையும் வழங்கியிருக்கலாம். இந்த வங்கிக் கணக்கு தொடங்கப்பட்ட சில நாள்களிலேயே உங்கள் மொபைலுக்கோ, இ-மெயில் முகவரிக்கோ வீட்டு மனைகள், மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள் குறித்த விளம்பரங்கள் வரத் தொடங்குவதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். நீங்கள் கணக்குத் தொடங்கிய வங்கி உங்கள் விவரங்கள் அனைத்தையும் அதனுடன் இணைப்பில் இருக்கும் மற்ற நிறுவனங்களுக்கு உங்களின் அனுமதி இல்லாமல் வழங்கியதே இதற்குக் காரணம்.

அடையாள ஆவணங்களை பாதுகாப்பது எப்படி ?

அரசு தொடர்பான விஷயங்கள் தவிர, மற்ற காரியங்களுக்கு உங்களின் அடையாள ஆவணங்களைத் தருவதற்கு முன் நன்றாகச் சிந்தியுங்கள். உங்களின் ஆவணங்களை பாதுகாப்பான இடத்தில்தான் தருகிறீர்களா அதனால் பின்விளைவுகள் ஏதும் ஏற்பட வாய்ப்புள்ளதா என்று நன்கு ஆராய்ந்த பிறகே ஆவணங்களைப் பகிர வேண்டும்.

விவரங்களைத் தராதீர்கள்...

யாரேனும் உங்களின் மொபைலுக்கு தொடர்பு கொண்டு ஆதார், பான் போன்ற ஆவணங்களின் விவரங்களைக் கேட்டால், தர வேண்டாம். சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து அதிகாரப்பூர்வமான முறையில் ஆவணங்கள் கேட்கப்பட்டால் மட்டுமே அவற்றை வழங்க வேண்டும். எல்லா இடங்களிலும் ஆதார், பான் கார்டுகளை வழங்க வேண்டாம். சில இடங்களில் உங்களின் முகவரியை உறுதி செய்வதற்கான ஆவணத்தைக் கேட்பார்கள். அதற்கு ஆதார். பான் கார்டுகள் தேவையில்லை. இருப்பிடச் சான்றிதழே போதுமானது. இதுபோல் எங்கே எந்த ஆவணம் தர வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டு, அதன்படி நடப்பது அவசியம்.

ஆவணங்கள் விஷயத்தில் நாம் அலட்சியமாக இருந்தால், பிறகு கஷ்டப்பட வேண்டியிருக்கும். ஆதலால் விழிப்புடன் இருந்து ஏமாற்றப்படுவதை தவிர்ப்போம்.



தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வெற்றிக் கதை
மகளிர் திட்டத்தால் உயர்ந்த பொருளாதாரம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகளால் நம் மாநிலத்தின் கடைக்கோடியில் வசிக்கும் ஏழைப் பெண்கள் கூட தொழில் முனைவோர்களாக உருமாறியுள்ளனர். அதேபோல் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மக்கள் கூட பொருளாதார வளர்ச்சி பெற்று வருகின்றனர். அவ்வாறு பொருளாதார வளர்ச்சிப் பெற்ற பெண் ஒருவர் தனது வெற்றிக் கதையை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.

“முற்றம் வாசகர்கள் அனைவருக்கும் வணக்கம். என்னுடைய பெயர் ஸ்னேகா. நான் நரிக்குறவர் இனத்தை சேர்ந்தவள். நானும் என்னுடைய இனத்தைச் சேர்ந்தவர்களும் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், நெமிலி ஊராட்சி, காரந்தாங்கல் கிராமத்தில் கடந்த 30 ஆண்டுகளாக வசித்து வருகிறோம்.

இப்பகுதியில் மொத்தம் 44 நரிக்குறவர் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். நாங்கள் நாடோடிகளாக சுற்றித் திரிந்து பாசி மணியில் செய்யப்படும் மணி மாலைகள், சோப்பு, சீப்பு மற்றும் பலவிதமான பொருட்களையும் திருப்பெரும்புதூர் பேருந்து நிலையத்திலும் மற்றும் அருகாமையில் உள்ள ஊர்களுக்கு சென்று திருவிழா நடைபெறும் இடங்களிலும் விற்பனை செய்து வந்தோம்.

எங்களுக்கு சொந்தமாக எங்கள் பொருட்களை விற்பனை செய்ய ஒரு இடம் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தோம். நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த 20 நபர்கள் ஒன்று சேர்ந்து மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி ஒரு சுய உதவிக் குழுவை ஆரம்பித்தோம். அக்குழுவில் உள்ள எங்களுக்கு குன்றத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் புதிய ரக ஆபரணங்கள் தயாரிக்க 15 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக மகளிர் திட்டம், நபார்டு வங்கி மற்றும் தொண்டு நிறுவனங்கள் இணைந்து கழிவு பட்டு நூலினால் ஆன வளையல்கள் மற்றும் ஆபரணங்கள் செய்ய பயிற்சி அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சீரிய முயற்சியால் எங்கள் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றிய பேருந்து நிலையத்திலுள்ள பூமாலை வணிக வளாகத்தில் கடை ஒதுக்கீடு செய்யப்பட்டது.

காஞ்சிபுரத்திலுள்ள பட்டு சேலை விற்பனை செய்யும் கடை உரிமையாளர்கள் நாங்கள் உற்பத்தி செய்யும் ஆபரணங்களை கொள்முதல் செய்து வருகின்றனர். மேலும், கூட்டுறவுத் துறையின் மூலமாகவும், துணிநூல் (ம) கைத்தறி அலுவலகம் மூலமாகவும் கழிவு பட்டு நூல்களை எங்களுக்கு இலவசமாக வழங்கிட மகளிர் திட்டத்தின் மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பிற மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் நடைபெறும் சாராஸ் கண்காட்சிகளிலும் எங்கள் நரிக்குறவர் இன மக்கள் உற்பத்தி செய்யும் ஆபரணங்கள் விற்பனை செய்யப்பட்டு எங்களின் வாழ்வாதாரம் சிறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் திருப்பெரும்புதூர் பேருந்து நிலையத்தில் உள்ள வணிக வளாகத்தில் ஒரு கடையினை திறந்து வைத்து எங்கள் உற்பத்தி பொருட்களை அந்த இடத்தில் விற்பனை செய்ய வழிவகை செய்துள்ளனர். இதனால் எங்கள் வாழ்க்கைத்தரம் உயர்ந்து வருகிறது.

எங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கும், காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகத்திற்கும் எங்களின் நரிக்குறவர் மகளிர் குழுவின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்” என்று மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார் மகளிர் திட்டத்தால் பயன் பெற்ற சினேகா.

கடலை மிட்டாய் பிசினஸில் மாதம் 4 லட்சம் டர்ன் ஓவர்...

கலக்கும் கணவன்-மனைவி!

“எங்க வாழ்க்கை இன்னிக்கு நல்லபடியா இருக்க, என் மனைவிதான் காரணம். ரொம்ப நெருக்கடி யான நேரத்துல சொந்தமா பிசினஸ் தொடங்கலாம்னு அவங்க எடுத்த முடிவுதான் இன்னிக்கு எல்லாத்தையும் முழுசா மாத்தியிருக்கு” - பெருமையுடன் தன் மனைவியை அறிமுகம் செய்கிறார் ஜெகசாமி.

தூத்துக்குடி மாவட்டம் கீழஈரால் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் ஜெயசுந்தரி - ஜெகசாமி தம்பதியர். தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்த தன் கணவரை சொந்தமாக தொழில் தொடங்க ஊக்கப்படுத்தி, கடலை மிட்டாய் தொழிற்சாலையைத் தொடங்கச் செய்து தொழில்முனைவோராக முன்னேறியிருக்கிறார் ஜெயசுந்தரி. அரசின் ‘வாழ்ந்து காட்டுவோம்’ திட்டத்தின் கீழ் கடனுதவி பெற்று, கீழஈரால் கிராமத்தில் சொந்தமாக தொழிற்சாலை நடத்தி வரும் ஜெயசுந்தரி - ஜெகசாமி தம்பதியை அவர்களின் தொழிற்சாலையில் சந்தித்தோம்.

“எங்களுக்குச் சொந்த ஊரு கீழஈரால் கிராமம். சென்னையில வேலைபார்த்திட்டிருந்தோம். ஒரு கடலை மிட்டாய் நிறுவனத்துல வேலை பார்த்துக்கிட்டே, பார்ட் டைமா ஒரு அல்வா கடைக்கு டீலரா வேலைபார்த்துட்டிருந்தேன். கடலை மிட்டாய் தயாரிப்பு பத்தி எனக்கு நல்லா தெரியும். சென்னையில எனக்குக் கிடைச்ச வருமானத்துல குழந்தைங்க படிப்பு, வீட்டுச் செலவுனு எதையும் சமாளிக்க முடியல. அப்பதான் என் மனைவி சொந்தமா தொழில் தொடங்கலாம்னு ஐடியா கொடுத்தாங்க” என்று ஜெகசாமி முடிக்க, பிசினஸ் ஆரம்பித்தது பற்றி தொடர்கிறார் ஜெயசுந்தரி.

“இவருக்கு கடலை மிட்டாய் தயாரிப்பு தெரியும்ங்கிறதால அதையே பிசினஸா ஆரம்பிக்கலாம்னு நினைச்சோம். சென்னையில தொழிற்சாலை தொடங்க கட்டட வாடகை கட்டுப்படியாகாம சொந்த ஊருக்கே வந்துட்டோம். ஆரம்பத்துல அஞ்சு கிலோ கடலை வாங்கி கடலை மிட்டாய் தயாரிச்சுப் பார்த்தோம். பதம் சரியா வந்துச்சு. இவரு ஏற்கெனவே அல்வா கடைக்கு டீலரா இருந்ததால அந்தக் கடைகள்லயே எங்களோட கடலை மிட்டாய்க்கு ஆர்டர் கேட்டோம். அவங்களும் இவர் மேல இருந்த நம்பிக்கையில சாம்பிள்கூட கேட்காம 20 கிலோ, 30 கிலோனு ஆர்டர் கொடுத்தாங்க. அப்புறம், என் தாலியை அடமானம் வெச்சு 35,000 ரூபாய் வாங்கி கடலை மிட்டாய் தயாரிக்க அடுப்பு, பாத்திரம், மூலப்பொருள்கள் எல்லாம் வாங்கினோம்.

‘வி.வி.என்’கிற பேர்ல பிராண்ட் பெயரை பிரின்ட் பண்ணி நாங்களே பேக்கிங் செஞ்சோம். எங்க ஊர்ல இருந்து சென்னைக்குக் கிளம்புற பஸ்ல கடலை மிட்டாய்களைக் கொடுத்து விடுவோம். நிறைய ஆர்டர் வரவே, அடுத்து பொரி உருண்டை, எள்ளு மிட்டாய், அரைச்ச கடலை உருண்டைனு கடலை சார்ந்த விதவிதமான ஸ்நாக்ஸை அறிமுகம் பண்ணோம். உணவு தரக்கட்டுப்பாட்டுத் துறையில உரிமம் வாங்கி முறைப்படி பிசினஸை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தினோம். ஆரம்பத்துல நானும் அவரும் சேர்ந்துதான்

பாகு காய்ச்சுறது, கடலை வறுக்குறதுனு எல்லா வேலைகளையும் செஞ்சோம். ஆர்டர்கள் அதிகமாகவே, ஏழு பேரை வேலைக்குச் சேர்த்தோம். ‘பவளம்’கிற மகளிர் குழுவினர் எங்களுக்கு அறிமுகமானாங்க. எங்ககிட்ட இருந்து கடலை மிட்டாய்களை வாங்கி அவங்க குழுவோட லோகோ வெச்சு விற்பனை பண்ணிட்டிருந்தாங்க. நானும் அந்தக் குழுவுல உறுப்பினரா சேர்ந்தேன். குழு உறுப்பினர்களுக்கு அடுத்தகட்ட நகர்வு தேவைப்பட்டதால எங்களுடைய பிராண்டை குழுவோட பிராண்டா மாத்தி, ரெகுலரா அவங்களுக்கு நாங்க மிட்டாய் செஞ்சு தர்ற மாதிரி பேசினோம். நான் குழுவுல இருந்ததால அரசாங்கத்துல இருந்து கடன் உதவிகள் கிடைச்சது. குழு உறுப்பினர்களுக்கும் வேலை வாய்ப்பு உருவாக்கிக் கொடுத்துருக்கோம்” - ஜெயித்த கதை சொல்லி நிறுத்துகிறார் ஜெய சுந்தரி. தொடர்ந்து பேசுகிறார் ஜெகசாமி...

“கடலையை உடைச்சு வாங்கணுங்கிறதால விவசாயிகள்கிட்ட இருந்து நேரடியா வாங்க முடியாது. அதனால மில்கள்ல இருந்து வாங்குறோம். வாங்கிட்டு வந்த கடலையை வறுத்து எடுக்கணும். கடலையில மூக்கு மாதிரி உள்ள பகுதியைத் தனியா பிரிச்சு எடுக்கணும். அப்புறம் வெல்லத்தைக் காய்ச்சி பாகு எடுத்து, கடலையில ஊத்தி ஸ்நாக்ஸ் தயாரிக்கணும். தரத்தையும் சுவையையும் நல்லா கொடுத்தாலே வாடிக்கையாளர்கள் நம்மைத் தேடி வருவாங்க. அஞ்சு கிலோ கடலையில ஆரம்பிச்ச எங்கப் பயணம் இப்போ ஒரு நாளைக்கு 250 கிலோ ஸ்நாக்ஸ் தயாரிக்கிற அளவுக்கு உயர்ந்திருக்கு. மாசத்துக்கு 4 லட்ச ரூபாய் வரை டர்ன் ஓவர் பண்றோம். மூணு மாவட்டங்களுக்கு சப்ளை பண்ணிட்டிருக்கோம். சீக்கிரமே தமிழகம் முழுக்க களமிறங்குவோம்” - உற்சாகமும் தன்னம்பிக்கையும் ஊற்றெடுக்கிறது இருவரிடமும்.

நன்றி! அவள் விகடன்
09:04:2024

DDU-GKY பயிற்சியும்... வெளிநாடு வேலைவாய்ப்பும்

நான் நாகப்பட்டினம் மாவட்டம், தெத்தி ஊராட்சியில் வசித்து வருகின்றேன். நான் பள்ளிப்படிப்பை முடித்து இரண்டு ஆண்டுகள் வேலை தேடி அலைந்து வந்தேன். வறுமை நிலையில் இருந்ததால் என்னால் மேற்படிப்பும் தொடர முடியவில்லை. வேலைவாய்ப்பினை பெற்றிட முயற்சித்தேன். எங்கும் எனக்கு வேலை கிடைக்கவில்லை.

தமிழ்நாடுமாநிலஊரகவாழ்வாதாரஇயக்கத்தின் மூலம் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட நான் தகுதியான வேலையை பெற்றிட திறன் வளர்ப்பு பயிற்சி பெறுதல் அவசியம் என்பதை அறிந்தேன். DDU-GKY திட்டத்தின் கீழ் செயல்படும் பயிற்சி நிறுவனமான நாகப்பட்டினம் EGS Pillai Charitable and Educational Trust-ல் ``Air Condition Mechanic'' பயிற்சியை இலவசமாகப் பெற்றேன். அப்பயிற்சியின்போது உணவு மற்றும் தங்குமிட வசதியும் செய்து தரப்பட்டன. பயிற்சி முடித்த உடன் உள்ளூரில் ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் வாய்ப்பினை பெற்றேன். இப்பணியில் மாத ஊதியம் ரூ.10000/- பெற்று மூன்று மாதங்கள் அங்கு பணிபுரிந்தேன்.

இந்நிலையில் நான் பெற்ற பணி அனுபவத்தின் மூலம் துபாய் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. தற்போது துபாயில் உள்ள APCI எனும் முன்னணி நிறுவனத்தில் ரூபாய் 35,000/- ஊதியத்தில் வேலை பார்த்து வருகின்றேன். இதன் மூலம் எனது குடும்பம் பொருளாதார நிலையில் மேம்பட்டிருப்பது கண்டு பெருமையாக உள்ளது. அது மட்டும் இல்லாமல் சமுதாயத்திலும் குடும்பத்திலும் அங்கீகாரம் கிடைத்திருக்கின்றது. இத்தகைய வாழ்க்கையினை வழங்கிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், DDU-GKY திட்டத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மணிகண்டன்,
தெத்தி ஊராட்சி, நாகப்பட்டினம்
மாவட்டம்.

கரூர் மாவட்டம், சோமூர் ஊராட்சி, திருமுக்கூடலூர் கிராமத்தை சேர்ந்த வெண்ணிலா கூறும்போது, ‘எங்கள் ஊரான திருமுக்கூடலூர் நீர் வளம் மிக்க ஆற்று பாசனம் உள்ள கிராமம் என்பதால் வருடம் முழுவதும் விவசாயம் சார்ந்த தொழில் நடைபெறும். குறிப்பாக எங்கள் கிராமத்தில் கோரை சாகுபடி அதிகமாக நடைபெறுகிறது. நானும் எனது கணவரும் காட்டிற்கு கூலி வேலைக்கு செல்வோம். கடந்த 2004 ஆம் ஆண்டு எங்கள் பகுதியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் டைகர் சுய உதவிக் குழுவில் சேர்ந்தேன்.

குழுவில் 12 முறை நேரடிக் கடன் பெற்று அதன் மூலம் கோரை காட்டை குத்தகைக்கு எடுத்து எங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொண்டுள்ளோம். குழுவில் இருந்ததால் தேவையானபோது கடனுதவி கிடைத்தது. இதனால் நான் கந்து வட்டி கொடுமையில் சிக்காமல் நிம்மதியான முறையில் எனது வாழ்க்கையை நடத்த முடிகிறது. மேலும் என்னுடைய குழந்தைகளையும் நன்றாக படிக்க வைக்க முடிகிறது. நான் திறன் பெற்றவளாக மாறியதுடன் என்னுடைய குடும்பத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துள்ளேன். எனது மகன் விஜய் கணினி இளநிலைப் பட்டம் படித்துள்ளதால், அவனுக்கு இ-சேவை மையம் வைத்துத் தந்துள்ளேன்.

என்னுடைய வாழ்க்கையில் அடுத்த தலைமுறைக்கு முன்னேற்றத்தை ஏற்படுத்தி கொடுத்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று மகிழ்ச்சி பொங்க கூறினார்.

வணிகம் வளர்க...

செங்கல்பட்டு மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களின்

தரமான தயாரிப்புப் பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

செங்கல்பட்டு மாவட்டம்

சுய உதவிக் குழுவின் பெயர்	தயாரிப்புப் பொருளின் பெயர்	
சம்பா மகளிர் சுய உதவிக்குழு, செங்கல்பட்டு மாவட்டம். கைபேசி : 91502 82418	ராகி முறுக்கு, தினை உருண்டை	
அமுதசுரபி மகளிர் சுய உதவிக்குழு செங்கல்பட்டு மாவட்டம். கைபேசி : 96001 13033	சிறுதானிய சத்துமாவு	
தென்றல் மகளிர் சுய உதவிக்குழு செங்கல்பட்டு மாவட்டம். கைபேசி : 99433 91152	ராகி உருண்டை, தினை உருண்டை	
பாரேரி கைவினை மகளிர் சுய உதவிக்குழு செங்கல்பட்டு மாவட்டம். கைபேசி : 96559 26400	காகிதகூழ் பொம்மைகள்	
அக்கினி சிறகுகள் மகளிர் சுய உதவிக்குழு செங்கல்பட்டு மாவட்டம். கைபேசி : 74187 18010	சாவிக் கொத்துகள்	

உடல் நலம் காப்போம்...

கோடைக் கால நோய்களும்... அவற்றைத் தவிர்க்கும் மருத்துவமும்!

கோடைக்காலம் துவங்கி விட்டதால் வெயில் சுட்டெரிக்க ஆரம்பித்து விட்டது. வெயிலுக்கே உரிய நோய்களான வியர்க்குரு, சின்னம்மை, சரும நோய்கள், காய்ச்சல் என பலவும் நம்மைத் தாக்கக் காத்திருக்கின்றன. இவற்றிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கான பாதுகாப்பு முறைகளை தெரிந்து கொள்வோம் வாருங்கள்.

துன்பம் தரும் சின்னம்மை...

கோடையில் அதிக ஆற்றலுடன் செயல்படும் நோய்க்கிருமிகளில் முதன்மையானது சிக்கன்பாக்ஸ் என்று சொல்லக்கூடிய சின்னம்மை. இதை உருவாக்கும் கிருமி, நம் உடலில் விரைவாக தொற்றிக் கொள்ளும் தன்மை கொண்டது. கோடைக் காலத்தில் இன்னும் வீரியமாகச் செயலாற்றும். வெளியில் வேலை செய்பவர்களுக்கும், இரண்டு சக்கர வாகனங்களில் அலைபவர்களுக்கும் எளிதில் தொற்றும். பாதிக்கப்பட்ட ஒருவரிடமிருந்து எளிதாக மற்றவர்களுக்கும் பரவிவிடும். உடம்பில் நீர்ச்சத்துக் குறைந்தாலும் சின்னம்மை ஏற்படும்.

அதிக ஜுரம், பின் கழுத்து, முதுகு, கை போன்ற இடங்களில் சிறுசிறு கொப்புளங்கள் போன்றவை இதற்கான அறிகுறிகள். இந்த கொப்புளங்களைக் கிள்ளக்கூடாது. இவை, ஒரு வாரத்தில் தாமாகவே மறைந்து விடும். முன்னோர் சொன்னபடி, வேப்பிலையை விரித்து அதன் மீது படுப்பது, வேப்பிலை, மஞ்சள் கலந்த நீரில் குளிப்பது, வேப்பங்கொழுந்தை அரைத்துக் குடிப்பது போன்றவற்றை கடைபிடித்தால், கொப்புளங்களால் ஏற்படக்கூடிய அரிப்பு நீங்கும். அதிகப்படியான அரிப்போ அல்லது அதிக காய்ச்சலோ இருந்தால் மட்டுமே மருத்துவரிடம் செல்ல வேண்டும்.

எண்ணெய் சேர்த்த உணவுகள், அசைவ உணவுகளை முற்றிலும் தவிர்க்க வேண்டும். ஆவியில் வேகவைத்த காய்கறிகள், இயற்கையிலேயே குளிர்ச்சியான உணவுகள், பழங்கள், மோர், இளநீர், தண்ணீர் போன்றவற்றை அதிகமாக சாப்பிட வேண்டும்.

கோடைக்கால சளி மற்றும் காய்ச்சல்

மற்ற பருவ நாட்களில் ஏற்படும் வைரஸ் காய்ச்சலில் இருந்து கோடைக்காலத்தில் ஏற்படும் சளி மற்றும் காய்ச்சல் போன்றவை மாறுபட்டவை. இதை உருவாக்கும் வைரஸ்கள், கோடையில் அதிக வலிமையுள்ளதாக இருக்கும். சளி, இருமல், காய்ச்சல் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தும். சுற்றுச்சூழல் மூலமாகவும், பகலில் அதிக வெப்பம், மாலையில் அதிக குளிர் போன்ற சீதோஷ்ண மாற்றத்தாலும் இவை பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

வியர்க்குரு, வேனல் கட்டிகள்

உடம்பின் வெப்பநிலை அதிகரிப்பதால், உடலில் உள்ள நீர்ச்சத்து, விரைவாகக் குறைந்து வற்றிவிடும். இதனால் உடலின் வெப்பநிலை அதிகரித்து, அவை உடம்பில் வேனல் கட்டிகளையும், முகத்தில் பருக்களையும் ஏற்படுத்தும். இவை அதிக வலி தருவதாக இருக்கும். அளவில் சிறிய கட்டிகளாக இருந்தால் இரண்டு, மூன்று நாட்களில் சரியாகிவிடும். சீழ்பிடிக்கும் அளவுக்கு பெரியதாக இருந்தால், மருத்துவரிடம் செல்ல வேண்டும். இந்தக் கட்டிகளை கையால் தொடவோ, கிள்ளவோ கூடாது. இதன் சீழ் மற்ற இடங்களில் பட்டால், அங்கேயும் கட்டிகள் தோன்ற வாய்ப்புகள் அதிகம்.

வியர்வை உடம்பில் தங்குவதால் வியர்க்குரு ஏற்படுகிறது. ஆகையால், வியர்வையை உடம்பில் தங்க விடாதபடி முகத்தை வெறும் நீரால் கழுவுவது, உடம்பை ஈரமான துணியால் துடைத்துக் கொள்வது, தினமும் இரண்டு முறை குளிப்பது, வெளியில் செல்லும்போது வியர்க்குரு பவுடர் போட்டுச் செல்வது என்று பராமரிப்பதன் மூலம் வியர்க்குருவிலிருந்து தப்பிக்கலாம். வியர்க்குரு வந்துவிட்டால், கையால் தொட்டு சொறியக்கூடாது. இரண்டு வேளை குளிப்பது, இயற்கையிலேயே குளிர்ச்சியான உணவுகளை எடுத்துக் கொள்வது, அரிக்கும் இடங்களில் அதற்கான பவுடர் போடுவது ஆகியவற்றை மேற்கொண்டால் வந்த வேகத்தில் அவை மறைந்துவிடும்.

வியர்வை காரணமாக ஜலதோஷம் பிடிப்பது வழக்கமே. குறிப்பாக, தலைப்பகுதியில் ஏற்படும் வியர்வையின் ஈரம் காரணமாகவே இந்தத் தொல்லை. எனவே, வியர்வையை துடைத்துக் கொண்டே இருக்க வேண்டும்

சருமப் பிரச்னைகள்

இறுக்கமான ஆடைகள், உள்ளாடைகளால் சருமத்தில் வியர்வை தேங்கி படர்தாமரை, அரிப்பு, தோல் வீங்குதல் (படர்தாமரை பரவும் இடங்களில் தோல் வீங்கி சிவப்பது) போன்ற பாதிப்புகள் உண்டாகும். அதிக தூசு, வெப்பம் கலந்த காற்று காரணமாகவும் சருமத்தில் அலர்ஜி ஏற்படும். உடலை மறைக்கும் பருத்தி ஆடைகளை அணிவது, தோல் வீங்கிய பகுதிகளை கையால் தொந்தரவு செய்யாமல் இருப்பது, முடிந்தவரை உடலைத் தூய்மையாக வைத்திருப்பது, படர்தாமரைக்கான க்ரீம்களை மருத்துவர் ஆலோசனையோடு தடவுவது ஆகியவற்றை மேற்கொண்டாலே பிரச்னை தீர்ந்து விடும்.

கோடை நோய்களைத் தவிர்க்க சில குறிப்புகள்..

- நாளொன்றுக்கு சராசரியாக 10-12 கிளாஸ் தண்ணீர் குடிப்பதை உறுதிப்படுத்துங்கள்.
- தண்ணீரைத் தவிர இளநீர், மோர் மற்றும் லெமன் ஜூஸ் போன்ற திரவங்களை அதிகம் சாப்பிடுங்கள்.
- பருத்தி ஆடைகளை அணியுங்கள். வெளியே செல்லும்போது குடையை எடுத்துச் செல்லுங்கள்.
- கூடுமானவரை வெளியில் சாப்பிடுவதை தவிர்க்கவும்.
- தர்பூசணி, வெள்ளரி, கரும்பு மற்றும் மாம்பழம் போன்ற பழங்கள் மற்றும் நிறைய காய்கறிகளை சாப்பிடுங்கள்



சட்டம் என்ன சொல்கிறது?

பணி இடங்களில் பாலியல் வன்முறைக்கு எதிரான பெண்கள் பாதுகாப்புச் சட்டம் 2010

இவ்வுலகிலே சீரும், சிறப்பும் வாய்ந்தவர்கள் யாரென்று கேட்டால், அனைவருமே நம்மைப் பெற்றெடுத்த தாய்மார்களைத்தான் கூறுவோம். தாய்மை என்பது பெண்களுக்கே உரிய தனிச்சிறப்பு. கருவறை முதல் கல்லறை வரை ஒவ்வொரு மனிதரின் வெற்றிக்குப் பின்புலத்திலும் பெண்ணின் பங்கு உண்டு என்பது உலகறிந்த உண்மை. சமூகத்திலே பல்வேறு வகையான வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டு ஒட்டுமொத்த சமுதாய வளர்ச்சிக்கு வித்திடுபவர்கள் பெண்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இவ்வாறு வளர்ச்சிப் பாதையில் சமுதாயத்தை இட்டுச் செல்லும் பெண்கள் பாதுகாப்போடு நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியம்.

பெண்கள் கல்வி கற்று பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகிறார்கள் என்று வெளிப்படையாகத் தெரிந்தாலும், அந்த துறைகளில் உள்ள பெண்கள் பாதுகாப்போடு பணி செய்ய முடிகிறதா என்றால் அது ஒரு பெரிய கேள்விக்குறிதான். நகர்புறங்களில் பல கம்பெனிகளிலும், தொழிற்சாலைகளிலும், தொலைக்காட்சி நிறுவனங்களிலும், ஊடகங்களிலும் பணி புரியும் பெண்கள் பாதுகாப்பற்ற சூழலில் பல வகையான பணிகளைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். இன்னும் கிராமப்புறங்களில் வாழும் பெண்கள் பாதுகாப்பின்றி அதிகளவில் வாழ்க்கையை தொடருகின்றனர்.

இந்தியாவில் பெண்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு 2010-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டதுதான் "பணி இடங்களில் பாலியல் வன்முறைக்கு எதிரான பெண்கள் பாதுகாப்புச் சட்டம் 2010". இச்சட்டத்தின் முக்கிய நோக்கமே, பணி இடங்களில் பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தித் தருவதே ஆகும்.

இச்சட்டம் எல்லா இடங்களிலும் பணி செய்யும் பெண்களுக்கு பொருத்தமானதாக உள்ளது. அரசுத் துறையாகவோ, தனியார் துறையாகவோ, வேறு எந்த நிறுவனங்களாக இருந்தாலோ அங்கு பெண்கள் பாலியல் ரீதியான வன்முறைகளால் பாதிக்கப்பட்டால் இச்சட்டம் மூலம் நீதி பெறலாம். மேலும், பாலியல் வன்முறைக்குத் தூண்டிய அதிகாரிகளையோ, ஏனைய ஆண்களையோ, சட்டப்பூர்வமாக நடவடிக்கை எடுத்து தண்டிக்கலாம். இந்த பாதுகாப்புச் சட்டம் "பாலியல் வன்முறை' என்றால் என்ன என்ற தெளிவான விளக்கத்தையும் வழங்குகிறது. "பெண்கள் பணி செய்ய உகந்த சூழலை ஏற்படுத்தி தராத நிலையே பாலியல் வன்முறை" என்பதை வலியுறுத்தி, அத்தகைய செயல்களை அறவே தடைசெய்ய முயற்சிக்கிறது. பலதுறைகளில் பணி செய்யும் பெண்களுக்கு மட்டுமல்ல இச்சட்டம். ஒரு நிறுவனத்திற்கு வந்துபோகும் பெண்களாக இருந்தாலும், படிக்கின்ற பெண்கள், பள்ளி, கல்லூரி / பல்கலைக்கழகங்களில் பணி செய்வோர், மருத்துவமனைகளில் நோயுற்றிருப்போர் போன்றவர்களுக்கும் முழுமையான பாதுகாப்பினை வழங்க முற்படுகிறது. இச் சட்டத்தின் கீழ் ஒவ்வோர் அமைப்பிலும் உள்ளார்ந்த புகார் குழுக்களை ஏற்படுத்தி அதன் மூலம் புகார் செய்ய பரிந்துரைக்கப்படுகிறது. இச்சட்டத்திற்கு கீழ்ப்படியாத அதிகாரிகள் சிறைத் தண்டனையும், 50,000/- க்கும் அதிகமான அபராதத்தையும் சந்திக்க நேரிடும். பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் செய்த 90 நாட்களில் விசாரணையை முடித்து நடவடிக்கையை எடுக்க இச்சட்டம் வலியுறுத்துகிறது.

பெண்களுக்கு எதிராக நடத்தப்படும் வன்முறை மீறல்கள் அனைத்தும் மனித உரிமை மீறல்களே. அத்தகைய மனித உரிமை மீறலை செய்யும் நபர் யாராக இருந்தாலும் எந்த பதவியிலிருந்தாலும் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். பெண்களின் பாதுகாப்பிற்கு மிகவும் உதவி செய்திடும் வகையில் இச்சட்டம் அமைந்துள்ளது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. நாட்டின் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமெனில் வேலை செய்யும் இடங்களில் பெண்களுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும்.

வளம் தந்த வாழ்வாதார இயக்கம்

மதுரை மாநகராட்சி, மண்டலம் 2, மீனாம்பாள்புரத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் திருவள்ளுவர் மகளிர் சுய உதவிக் குழுவானது செயல்பட்டு வருகிறது. இக்குழுவிற்கு முதல் வங்கி கடன் இணைப்பாக ரூ.2,23,000/- வழங்கப்பட்டது. இக்குழுவினர் தாங்கள் வாங்கிய கடனை முறையாகத் திருப்பி செலுத்தியதால், 2 மற்றும் 3 வங்கி கடன் இணைப்பாக முறையே ரூ.3,80,000/- மற்றும் ரூ. 8,00,000/- பெற்றனர்.

முதலில் இக்குழுவினர் சில தையல் இயந்திரங்களை வாங்கி சிறிய அளவில் தொழில் செய்து வந்தனர். தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் சமுதாய அமைப்பாளர் மூலம் இக்குழுவின் உறுப்பினர்களுக்கு எல்லோ பேக்ஸ் நிறுவனம் (Yellow Bags) மூலமாக துணிப் பைகள் தைக்க பயிற்சி வழங்கப்பட்டது. மேலும் அந்நிறுவனத்தின் மூலமாக சிறிய அளவில் பணி ஆணைகள் பெறப்பட்டு துணிப்பைகள் தைத்து வழங்கி வந்தனர்.

இந்நிலையில் ரூ.1,00,000/- முதலீட்டில் சிறிய அளவிலான தையல் யூனிட் துவங்கப்பட்டு, அந்த யூனிட் மூலம் அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து ஆர்டர் பெற்று துணிப் பைகளை திருவள்ளுவர் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தைத்து தர ஆரம்பித்தனர்.

இத்தொழிலின் மூலம் வருவாய் பெற்ற இக்குழுவினர், விற்பனைக் கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்து, துணிப்பைகளை விற்பனை செய்து வருவாய் ஈட்டினர்.

தங்களின் தொழிலை விரிவாக்கம் செய்திடும் நோக்கத்தில், ஆலங்குளம் பகுதியில், பெரிய அளவில் தையல் யூனிட்டை துவக்கி, அதிக அளவில் துணிப்பைகளைத் தைத்துக் கொடுத்து வருவாய் பெற்று வருகின்றனர். தற்போது ஒவ்வொரு உறுப்பினரும் மாத வருமானமாக ரூ. 10,000/- பெற்று, தங்களின் பொருளாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்துள்ளனர்.

சமுதாயத்தில் நல்ல நிலையில் வாழ்வதற்கு தங்களுக்கு உறுதுணையாகவும் வழிகாட்டியாகவும் இருந்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு திருவள்ளுவர் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம், வார்டு எண். 80, டவுன்ஹால் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் முல்லை மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. 12 பெண்கள் உறுப்பினர்களாக உள்ள இக்குழுவில் உள்ள 5 பெண்கள் இணைந்து பிரியாணி மசாலா தயாரிக்கும் தொழிலினை செய்து வருகின்றனர்.

இக்குழுவினர் கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைமையகம் கிளை மூலம் ரூ.1,00,000/- கடன் பெற்று, அந்தக் கடன் தொகையை முறையாக செலுத்தியுள்ளனர். பிரியாணி மசாலாத் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று தங்களது வாழ்வாதாரத்தை உயர்த்தி வருகின்றனர். தங்களது வாழ்வாதாரத்தை உயர்த்திட வழிகாட்டிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு முல்லை மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

வழிகாட்டிய வாழ்வாதார இயக்கம்

திருப்பத்தூர் நகராட்சி, செட்டித் தெருவில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் சுபிட்சம் மகளிர் சுய உதவிக் குழுவானது சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் உறுப்பினர்களான 14 பெண்கள் ஒன்றாக சேர்ந்து சுய தொழிலாக ஜெர்மன் வெள்ளியில் கைவினைப் பொருட்களைத் தயாரிக்கும் தொழிலினை மேற்கொள்ள தீர்மானித்தனர். தங்களின் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்கள் வாங்க, சுபிட்சம் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் ரூ.50,000/- வங்கிக் கடன் வழங்கப்பட்டது.

தற்போது ஜெர்மன் வெள்ளியில் பல்வேறு விதமான கைவினைப் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்து வருவதன் மூலம் சுபிட்சம் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் நாள் ஒன்றுக்கு ரூ.300/- முதல் ரூ. 400/- வரை வருவாய் பெறுகின்றனர். இந்த வருவாயினைக் கொண்டு, தங்களின் குடும்பத் தேவைகளை நிறைவு செய்து வருகின்றனர். இவர்களின் வாழ்வாதாரமும் உயர்ந்து வருகிறது.

இத்தொழிலை தொடங்கிட வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு சுபிட்சம் குழுவின் உறுப்பினர்கள் தங்களது நன்றிகளை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றனர்.

சுய உதவிக் குழுக்கள் மற்றும் கைவினைஞர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் "நெல்லை கிராப்ட்ஸ்'

திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் நலிவுற்ற கைவினை கலைஞர்களால் தயாரிக்கப்படும் தனித்தன்மை வாய்ந்த பல்வேறு வகையான கைவினைப் பொருட்களை விற்பனை செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, பாளையங்கோட்டை மேற்கு கோட்டை வாசலில் அமைந்துள்ள மேடை காவல் நிலையம் அருகில் "நெல்லை கிராப்ட்ஸ்" என்ற பெயரில் நவீன வடிவமைப்புடன் பிரத்யேக விற்பனையகம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் அமைக்கப்பட்டுள்ள திருநெல்வேலி நகர்ப்புர வாழ்வாதார மையத்தின் மூலம் இந்த விற்பனையகம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்த விற்பனையகத்தில் திருநெல்வேலி மாவட்டத்தின் தனித்துவம்மிக்க பொருட்களான பத்தமடை பாய் பொருட்கள், இராதாபுரம் பனை ஓலை பொருட்கள், அம்பாசமுத்திரம் மர பொம்மைகள், வாகைகுளம் குத்துவிளக்கு, காருகுறிச்சி மண்பாண்டங்கள், களக்காடு வாழைநார் மற்றும் கற்றாழை நார் பொருட்கள் ஆகியவை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மேலும், இந்த விற்பனையகத்தில் வைக்கப்பட்டுள்ள பொருட்கள் பற்றிய விபரங்களை உள்ளூர், வெளியூர், பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்கள் அறிந்து கொள்ளவும், சந்தைப்படுத்துதலை மேம்படுத்தவும், www.belliacrafts.ib என்ற இணையதள முகவரியிலும், Amazon, Instagram, Twitter, Youtube channel மற்றும் Facebook ஆகிய சமூக ஊடகங்களிலும் இவ்விற்பனையகம் பற்றிய விபரங்களை பதிவு செய்து அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

சுய உதவிக் குழுக்கள் மற்றும் கைவினைஞர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு நல்லதொரு வழிகாட்டியாக "நெல்லை கிராப்ட்ஸ்" அமைந்துள்ளது.

ஒன்றுபட்டோம்... வளர்ச்சி பெற்றோம்...

கிருஷ்ணகிரி மாவட்டம், நாகோஜனஹள்ளி நகர பஞ்சாயத்தில் 20 சுய உதவிக் குழுக்களை உறுப்பினர்களாகக் கொண்டு அருணேஸ்வரி பகுதி அளவிலான கூட்டமைப்பு செயல்பட்டு வருகிறது. இக்கூட்டமைப்பில் மாதந்தோறும் இரண்டு கூட்டங்கள் நடத்தப்பட்டு, மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டு, தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

இக்கூட்டமைப்பில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களின் சேமிப்புத் தொகையை தவறாது செலுத்தி வருகின்றனர். சுழல் நிதி, உள்கடன், வங்கிக் கடன் இணைப்பு போன்றவற்றைப் பெற்ற இக்கூட்டமைப்பானது அந்தத் தொகையை தனது உறுப்பினர் குழுக்களுக்கு கடனாக வழங்கி, முறையாக கடனைத் திரும்பப் பெற்றுள்ளது.

கடனைப் பெற்ற உறுப்பினர்கள் மளிகைக் கடை, டீக்கடை, சிற்றுண்டி பொருட்கள் தயாரிப்பு உள்ளிட்ட தொழில்களை மேற்கொண்டு வருவாய் பெற்று, தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகின்றனர்.

குழுவாக இணைந்து, கூட்டமைப்பாக வளர்ந்துள்ள அருணேஸ்வரி பகுதி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள், என்றும் தங்களுக்கு உறுதுணையாக இருந்து வரும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

நல்லதொரு வாய்ப்பை தந்த வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் நாகப்பட்டிணம் மாவட்டம், தலைஞாயிறு பேரூராட்சியில் வசந்தம் மகளிர் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் சிறுபான்மையினத்தைச் சேர்ந்தவர்கள். தர மதிப்பீடு செய்யப்பட்ட இக்குழுவிற்கு வங்கி கடனாக முதல் தவணையாக ரூ.1,20,000/மும், இரண்டாம் தவணையாக ரூ.2,00,000/-மும், மூன்றாம் தவணையாக ரூ.4,00,000/-மும் வழங்கப்பட்டுள்ளது. நான்காவது தவணை வங்கி கடனாக ரூ.8,00,000/- பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இக்குழுவின் உறுப்பினரான சி. பாத்திமா பீவி என்பவர், சிறிய அளவில் பெட்டிக் கடை வைத்து வருவாய் பெற்று வந்தார். தனது தொழிலை விரிவுபடுத்திடத் தேவையான முதலீடு இல்லாமல் சிரமப்பட்டு வந்த இவருக்கு, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் PMFME மூலம் முதலீட்டு ஆதார நிதியாக 40 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. இந்தத் தொகையை முதலீடாகக் கொண்டு, பாத்திமா பீவி தற்போது வடகம், வற்றல் போன்றவற்றை அதிக அளவில் தயாரித்து விற்பனை செய்து, அதிக அளவில் வருவாய் பெற்று வருகிறார்.

தங்கள் குழுவின் செயல்பாடு குறித்து வசந்தம் மகளிர் குழுவின் உறுப்பினர்கள் கூறும்போது, “குழுவில் இணைவதற்கே விருப்பமில்லாத எங்களை குழுவில் இணைத்து, வங்கி கடன், ஆதார நிதி, முதலீட்டு ஆதார நிதி என பெற்று தந்து, நல்லதொரு வாய்ப்பை எங்களுக்கு வழங்கிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், இவ்வியக்கம் நல்ல பல திட்டங்களை செயல்படுத்தி பின்தங்கிய மக்கள் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்” என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டனர்.

சுய உதவிக் குழுக்களின்
செயல்பாடுகளை அறிந்திட
முற்றம் படியுங்கள்!

முற்றம் மேலும் மேலும்
வளர்ந்திட உங்களின்
ஆதரவை
தாருங்கள்!

முற்றத்திற்கு சந்தா
செலுத்திடுங்கள்!

புத்தகத்தைப் படிக்க என்னை
Scan செய்யவும்

முற்றம் இதழின் சந்தா விபரம்	
ஒரு ஆண்டு	ரூ. 240/-
இரண்டு ஆண்டு	ரூ. 450/-
மூன்று ஆண்டு	ரூ. 680/-

விளம்பரக் கட்டணம்	
அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000/-
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000/-

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

ஒரு நல்ல தொழிலைக் கற்றோம்,
ஊறுகாய் அப்பளம் வணிகத்தில் வென்றோம்!

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டாரத்தில் உள்ள நம்புத்தாளை ஊராட்சி கடலோர கிராமமாக இருப்பதால் அப்பகுதியில் உள்ளவர்கள் முற்றிலும் கடல் சார்ந்த தொழிலை செய்து வருகின்றனர். மீன்பிடி தடைக்காலங்களில் போதிய வருமானம் கிடைக்காத காரணத்தால், அந்த ஊராட்சியில் வசிக்கும் பெண்கள் இணைந்து சுய தொழிலில் ஈடுபட ஆர்வத்துடன் இருந்தனர். அந்த சமயத்தில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் வழியாக RSETI தொழிற்பயிற்சி நிறுவனத்தில் ஊறுகாய், அப்பளம் போன்றவற்றை உற்பத்திச் செய்யக் கற்றுக் கொண்டு, அதற்குரிய சான்றிதழையும் பெற்றனர்.

தொழிற்பயிற்சியினைப் பெற்ற 7 பெண்கள் இணைந்து ஒரு தொழிற்குழுவை உருவாக்க TNRTP திட்டத்தின் வட்டார அலுவலகத்திற்குச் சென்றனர். ஆனால், வட்டார அணித்தலைவர் (ம) திட்ட செயலாக்குநர் அறிவுறுத்தலின்படி 10 முதல் 30 உறுப்பினர்கள் இணைந்துதான் தொழிற்குழுவை உருவாக்கி நடத்த முடியும் என்று சொன்னதை புரிந்து கொண்ட அந்தப் பெண்கள், கிராமத்தில் மேலும் 5 பெண்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கி, 12 பெண்களாக குழுவைப் பெரிதாக்கி, 31.12.2021 அன்று சுடர் அப்பளம் ஊறுகாய் தயாரிப்பு தொழிற்குழுவை உருவாக்கி அக்குழுவின் பெயரில் வங்கியில் நடப்புக் கணக்கைத் தொடங்கினர்.

அதன் பிறகு TNRTP திட்டத்தின் அறிவுறுத்தலின்படி, இந்தத் தொழிற்குழுவிற்கு தேவையான UDYAM பதிவு, FSSAI உரிமம், PAN அட்டை ஆகிய சேவைகளை மதி சிறகுகள் தொழில் மையத்தின் மூலம் பெற்றுக் கொண்டனர். வணிகத்தில் இணையதள பரிவர்த்தனை செய்வதற்கு TNRTP மூலம் இப்போ பே சேவை (Ippo PAY Service) வழங்கப்பட்டது.

தொழிலை திறம்பட செயல்படுத்த TNRTP திட்டத்திலிருந்து தொடக்க நிதியாக ரூ. 75,000/- பெற்று. ஆதனை மூலதனமாகக் கொண்டு, Sealer Machine, தளவாடங்கள், நாற்காலிகள், மின் விசிறி, தொப்பிகள், கையுறைகள், Hairnet ஆகியப் பொருட்களை வாங்கினர். ஆரம்பத்தில் குறைந்த அளவில் ஊறுகாய் உற்பத்திச் செய்து விற்பனை செய்து வந்தனர். சிறு சிறு கடைகளில் 10 முதல் 30 ஊறுகாய் பாட்டில்களை விளம்பரப்படுத்தி விற்பனைச் செய்து வருகின்றனர். நம்புதாளை ஊராட்சி நுஊசு கடற்கரை சாலை இருப்பதால், உள்ளூர் நபர்கள் முதல் சுற்றுலாப் பயணிகள் வரை இந்தத் தொழிற்குழுவினர் ஊறுகாய் வகைகளை விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.

தொழிற்குழுவை நிர்வகிக்கவும், வணிகத்தை மேம்படுத்தவும் TNRTP திட்டம் வழியாக சுடர் அப்பளம் ஊறுகாய் தயாரிப்பு தொழிற்குழுவின் உறுப்பினர்களுக்கு பயிற்சிகள் வழங்க ஒரு நல்ல தொழிலையும் கற்றுக் கொண்டனர்.

குழுவின் பதிவேடுகளை முறையாக பராமரித்து வருகின்றனர். இந்த நடவடிக்கையின் அடிப்படையில் இணை மானிய நிதிக்கடன் (MGP) ரூ. 5,00,000/- கேட்டு விண்ணப்பித்துள்ள தொழிற்குழுவினர், அந்தக் கடன் வழியாக Powder making machine வாங்கி மசாலாப் பொருட்களையும் தயார் செய்து விற்பனை செய்ய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தத் தொழிற்குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் நிலையான வருவாய் பெற்று வருகின்றனர்.

சுடர் அப்பளம் ஊறுகாய் தயாரிப்பு தொழிற்குழு திறம்பட செயல்பட்டு, நம்புதாளை ஊராட்சியிலுள்ள மற்ற பெண்களுக்கு சிறந்த முன்முதிரியாக உள்ளது. வரும் இளைய தலைமுறையினருக்கு சிறந்த வழிகாட்டியாக செயல்படுவோம் என சுடர் அப்பளம் ஊறுகாய் தயாரிப்பு தொழிற்குழுவின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றனர்.

கிருஷ்ணா ஸ்வீட்ஸ் மற்றும் ஸ்நாக்ஸ் தொழிற்குழுவின் வெற்றி

ஊகப் புத்தாக்கத் திட்டத்தின் வழிகாட்டுதலில் வெற்றி பெற்ற ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் மற்றும் ஸ்நாக்ஸ் தொழிற்குழுவின் உறுப்பினர்கள் கூறும்போது, "ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் மற்றும் ஸ்நாக்ஸ் தொழிற்குழுவினரான நாங்கள் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில் உள்ள பெருமாத்தூர் ஊராட்சியில் செயல்படுகிறோம். இந்தத் தொழிற்குழுவில் உள்ள 12 பெண்களும் ஒருங்கிணைந்து எங்கள் கிராமத்தில் சிறிய அளவில் ஸ்வீட்ஸ் மற்றும் ஸ்நாக்ஸ் விற்பனைச் செய்து வருகிறோம். தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் வட்டார அணியினர் மூலம் நடத்தப்பட்ட மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டத்தின் (PGP) செயல்பாட்டில் அறிமுகம் செய்யப்பட்ட நாங்கள், TNRTP திட்ட ஆதரவின் மூலம் ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் மற்றும் ஸ்நாக்ஸ் கடையினை 2021ஆம் ஆண்டு தொடங்கினோம். இந்த கடையில் இனிப்பு வகைகளையும், தின்பண்டங்களையும் தயாரித்து விற்பனை செய்து வருகிறோம்

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் வட்டார அணித்தலைவர், எங்கள் தொழிற்குழுவை உருவாக்கவும், பல்வேறு உரிமங்களைப் பெறவும், ஆவண செயல்முறைகளுக்கும் மிகவும் உதவினார்கள். TNRTP திட்டத்தினர் எங்கள் தொழிற்குழுவிற்கு தொடக்க நிதி ரூ. 75,000/- பெற்றுத் தந்ததுடன், அதில் தொழிலுக்கு வேண்டிய இயந்திரங்களான கிரைண்டர்கள் மற்றும் பன்முக பர்னர்ஸ் ஸ்டவ் வாங்கிடவும் உதவினர். இதன் மூலம் எங்கள் உற்பத்தியை நாங்கள் பெருக்கிக் கொண்டதுடன் எங்கள் பணிகளையும் எளிதாக்கிக் கொண்டோம்.

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் எங்களுக்கு சரியான நேரத்தில் வழங்கிய உதவிகளின் மூலம் நெய்வேலி டவுன்ஷிப்பில் உள்ள அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் உள்ள உணவகத்திற்கு இனிப்பு மற்றும் கார தின்பண்டங்களை வழங்கி வணிகத்தில் மேம்பட்டுள்ளோம்.

இப்பொழுது நாங்கள் எங்கள் தொழிலை விரிவுபடுத்தி உணவகத்தையும் நடத்துகிறோம். வீட்டுக்கு வீடு உணவுப் பொருட்களை கொண்டு சென்று வழங்கிட இரண்டு பெண்களை பணிக்கு அமர்த்தியுள்ளோம். இதற்காக TNRTP திட்டத்தின் வட்டார அணித்தலைவர் வழியாக ரூ. 2,50,000/- இணை மானிய நிதிக்கடன் (MGP) பெற்றுள்ளோம். இவையனைத்தும் TNRTP திட்டத்தின் வழிகாட்டுதலின்றி நடைபெற்றிருக்காது. எங்களுக்கு ஆதரவளித்து உதவிய திட்ட அலுவலர்களுக்கு எங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.

குடும்பத்தலைவியாக இருந்த மகேஸ்வரி, வெற்றிகரமான தொழில் முனைவோர் ஆனார்

செங்கல்பட்டு மாவட்டம், சின்னமலை வட்டாரம், மேடவாக்கம் ஊராட்சியில் வசித்து வருபவர் மகேஸ்வரி. சமையல் கலையில் ஆர்வம் கொண்ட இவர் தனது சமையல் திறமையால் வெற்றிகரமான தொழில் முனைவோர் ஆனார். வணிகத்தில் முன் அனுபவம் இல்லை என்றாலும் தனது ஆர்வத்தினால் தனது சொந்த சமையலறையில் புதுமையான சுவைமிகுந்த உணவுகளைத் தயாரித்து தனது சமையல் திறனை வெளிப்படுத்தினார்.

எனினும் தொழில் நடத்துவதற்கு நிதி இல்லாமல் மகேஸ்வரியின் ஆர்வத்தில் ஒரு தொய்வு ஏற்பட்டது. தொழில் சவால்களை வெல்ல இலட்சியம் கொண்டு நிலையான மற்றும் நிரந்தரமான வருவாயை உருவாக்கிட திட்டமிட்டிருந்த மகேஸ்வரியின் எதிர்பார்ப்பிற்கு ஏற்றார்போல் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் (TNRTP) தனிநபர் பெண் தொழில் முனவோரை ஊக்குவிக்கும் திட்டத்தினுள் அவரை இணைக்கும் ஒரு அரிய வாய்ப்பினை வழங்கியது.

TNRTP திட்டம் அளித்த மதிப்பு மிகுந்த ஆதரவின் மூலம், மகேஸ்வரி ரூ. 1,20,000/- மானிய நிதியுடன் ரூ. 4,00,000 (MGP) கடனுதவியினைப் பெற்றார். இந்த கடனுதவியின் மூலம் மகேஸ்வரி தனது நிறுவனத்தில் மசாலா உற்பத்திக்கு வேண்டிய இயந்திரங்களை வாங்கி, தைரியமுடன் தொழிலை விரிவாக்கியுள்ளார்.

TNRTP திட்டம் வழங்கிய ஆதரவினைக் கொண்டு கடும் உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புடன் மகேஸ்வரி தனது சமையல் தயாரிப்புகளைக் கொண்டு ஒரு திறமையான தொழில் முனைவோராக சாதித்து வருகிறார். இன்று இவரது மசாலா தயாரிப்புகள் உள்ளூரிலும், வெளி வட்டாரங்களிலும் நன்மதிப்பையும், பாராட்டுகளையும் பெற்றுள்ளதுடன், மாதாமாதம் ரூ. 25,000/- வரை நிலையான மற்றும் நிரந்தரமான வருவாயைக் கொடுத்து வருகிறது.

மகேஸ்வரியின் வெற்றி அவரது வளத்தை குறிப்பதோடு மட்டுமல்லாது, வாழ்வில் வெற்றிப் பெற நினைக்கும் தொழில் முனைவோருக்கு அறிவு சார்ந்த ஆதரவும், தொழில் வளர்ச்சிக்கான நிதியுதவியும் திட்டத்தால் வழங்கப்படுவதை எடுத்துக் காட்டுகிறது. இது போன்று உதவிகளைப் பெற்று ஒவ்வொரு பெண் தொழில் முனைவோரும் வாழ்வில் சாதித்துக் காட்டலாம்.

மகேஸ்வரியின் வெற்றிப் பயணம் ஆர்வமுள்ள தொழில் முனைவோருக்கு ஒரு உத்வேகமாக செயல்படுவதுடன், உறுதிப்பாடு மற்றும் சரியான ஆதரவுடன், தொழில் முனையும் பெண்களின் கனவுகள் உண்மையில் நனவாகும் என்ற நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

வெற்றிக்கு வழிகாட்டிய திட்டம்

என் பெயர் மகாலட்சுமி, நான் செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டாரம், மடையாத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். என் வாழ்வின் இலட்சியமாக சுயதொழிலைத் தொடங்கி, தரமான கட்டுமான உபகரணங்கள் மற்றும் தளவாடங்களை வழங்கி வருகிறேன். நான் மாதம் ரூ. 35,000/- வருவாயை ஈட்டி வந்தேன் ஆனபோதிலும் எனது தொழிலில் நிதி நெருக்கடியை சந்தித்தேன்.

அந்த வேளையில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் (TNRTP) பெரும் உதவியை செய்தது. அதன் மூலம் நான் என் தொழிலை புதிய வழியில் மேற்கொண்டேன். TNRTP திட்டம் வழியாக நான் ரூ. 1,26,600/- மானிய நிதியுடன் ரூ. 4,22,000/- இணை மானிய நிதிக்கடன் (MGP) பெற்று புதிய இடத்தில் எனது தொழிலை விரிவாக்கிக் கொண்டேன். நான் பெற்ற இணை மானிய நிதிக்கடனில் கட்டுமான வேலைகளுக்குத் தேவையான இயந்திரங்களை வாங்கினேன். இதன் மூலம் தொழிலில் புதிய உள்ளீடுகளையும், தொழில் வளத்தையும் கணிசமாக மேம்படுத்த உதவியது.

எனது தொழில் விரிவாக்கத்தின் மூலம் குறைந்த காலத்தில் நல்ல பலன் கிடைத்தது. மாத வருவாய் ரூ. 55,000/- ஆக உயர்ந்தது. இது முன்பு வந்த வருவாயைக் காட்டிலும் அதிகமாகும். எனது நிறுவனத்தின் மூலம் 6 பேருக்கு வேலைவாய்ப்புகளைக் கொடுத்து உள்ளூர்வாசிகளின் பொருளாதார வளர்ச்சிக்கும், நிலையான வாழ்வாதாரத்திற்கும் உதவியுள்ளேன்.

எனது தொழிலில் நான் பெற்ற வெற்றி, TNRTP திட்டம் வழங்கிய நல்லாதரவுக்கு ஓர் உண்மையான எடுத்துக் காட்டாகும். திட்டம் வழங்கிய நிதியுதவியின் மூலம் எனது பொருளாதார அளவு உயர்ந்தது மட்டுமல்லாது, என்னைச் சார்ந்த சமூகத்தினருக்கும் வளர்ச்சிக்கான வாய்ப்பை வழங்கியது. எனது வெற்றிக்கதை,புதியதொழிலைத்தொடங்கவுள்ள மகளிருக்கு விடாமுயற்சியையும், புதுமையையும், தேவையான உதவிகளையும் கேட்டுப் பெற்று ஒரு நிலையான மற்றும் நிரந்தரமானத் தொழிலை நடத்த வழிகாட்டுவதாக அமைந்துள்ளது. எனக்கு வழிகாட்டிய TNRTP திட்டத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

~ மகாலட்சுமி

குடைமிளகாய் சாதம்

என்ன சமைப்பது என தெரியாமல் யோசித்துக் கொண்டிருக்கிறீர்களா..? அல்லது சற்று சோர்வாக உணர்கிறீர்கள் என்றால் எளிமையான சமையலுக்கு இந்த குடைமிளகாய் சாதம் சிறப்பாக இருக்கும். அனைவரும் விரும்பும் ருசியில் இருக்கும் குடைமிளகாய் சாதத்தை எப்படி செய்வது எப்தை தெரிநித் கொள்வோம் வாருங்கள்.

தேவையான பொருட்கள்

பாஸ்மதி அரிசி - 1 கப், குடைமிளகாய் (நறுக்கியது) - 1 1/4 கப், கரம் மசாலா 1 தேக்கரண்டி, வெங்காயம் - 1, மசாலா அரைக்க : உளுத்தம் பருப்பு - 2 தேக்கரண்டி, தனியா - 2 1/2 தேக்கரண்டி, சீரகம் - 1 தேக்கரண்டி, காய்ந்த மிளகாய் - 4, தாளிக்க : எண்ணெய் 1 மேஜைக்கரண்டி, கடுகு - 1 தேக்கரண்டி,



செய்முறை :

பாஸ்மதி அரிசியை உதிரியாக பதமாக வேக வைத்து தண்ணீரை வடிகட்டி வைத்துக் கொள்ளுங்கள். குடை மிளகாயை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். அடுப்பினை பற்ற வைத்து அதில் ஒரு வாணலியை வைத்து எண்ணெய் விட்டு அரைக்க கொடுக்கப்பட்டுள்ள மசாலா பொருட்களை வறுத்துக் கொள்ளுங்கள். பின்னர் சிறிது காய வைத்து பின் மிக்ஸியில் பொடியாக அரைத்துக் கொள்ளுங்கள். அடுத்ததாக அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெய் விட்டு கடுகு சேர்த்து தாளியுங்கள். பின் வெங்காயம் சேர்த்து வதக்குங்கள். பின் குடை மிளகாய் சேர்த்து வதக்குங்கள். அரைத்த பொடியை சேருங்கள். கரம் மசாலாவும் சேர்த்துக்கொள்ளுங்கள். குடை மிளகாய் வெந்ததும் வேக வைத்த சாதத்தை சேர்த்து பிரட்டுங்கள். போதுமான அளவு உப்பு சேர்த்துக் கொள்ளுங்கள். பின்னர் கொத்தமல்லி தழையைத் தூவி கிளறி விடுங்கள். அவ்வளவுதான் குடைமிளகாய் சாதம் தயார். இதோடு வேக வைத்து உதிர்த்த மக்காசோளம் சேர்த்தாலும் ருசி அருமையாக இருக்கும்.

இதற்கு ரைத்தா, உருளைக்கிழங்கு சிப்ஸ் பொருத்தமான காம்பினேஷன்.

பயனுள்ள சிறு குறிப்புகள்

சிலரது வீட்டில் கேஸ் பர்னர் கரை படிந்து பார்ப்பதற்கே மிகவும் கருப்பாக இருக்கும். அப்படியான பர்னரை புதிதுபோல் பளபளவென்று சுத்தம் செய்ய முதலில் ஒரு எலுமிச்சை பழம் அளவிற்கு புளியை எடுத்து அதை ஒரு பாத்திரத்தில் போட்டு, தேவையான அளவு தண்ணீர் ஊற்றி நன்றாக கரைத்துக் கொள்ள வேண்டும். அதன் பிறகு அடுப்பில் உள்ள பர்னரை கழற்றி புளித் தண்ணீரில் 3 முதல் 5 மணி நேரம் நன்றாக ஊற வைக்க வேண்டும். பிறகு புளித்தண்ணீரில் இருந்து பர்னரை எடுத்து அதை ஸ்க்ரப்பர் கொண்டு நன்றாக தேய்க்க வேண்டும். சாதாரணமாக சாமான் கழுவுவது போல் தேய்த்தாலே போதுமானது.

அதன் பிறகு குழாயில் தண்ணீரை திறந்துவிட்டு அப்படியே பர்னரை அதில் காட்டி கழுவ வேண்டும். இப்படி செய்வதன் மூலம் பர்னரில் உள்ள சிறு ஓட்டைகளில் இருக்கும் அழுக்குகள், தண்ணீரின் வேகத்தினால் வெளியில் வரும். சிலர் இதே முறையில், வினிகர், எழுமிச்சை பழம் மற்றும் ஆப்ப சோடா ஆகியவற்றை கலந்து அதில் பர்னரை ஊறவைத்து சுத்தம் செய்வார்கள். இந்த இரண்டு முறைக்கும் உள்ள வித்யாசம் நேரம் மட்டுமே. புளித் தண்ணீர் கொண்டு சுத்தம் செய்பவர்கள் அதிக நேரம் ஊறவைக்க வேண்டும். வினிகர், எழுமிச்சை பழம் மற்றும் ஆப்ப சோடா கொண்டும் ஊறவைப்பவர்கள் அதிகபட்சம் 3 மணிநேரம் ஊற வைத்தாலே போதுமானது.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by B. RAJKUMAR, RASI GRAPHICS PRIVATE LTD, 40.Peters Road, Royapettah, Chennai - 600014. Published from (1,25,000 Copies Circulated)Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.

ஒற்றுமை நிறைந்த தொழிற்குழு, ★★★
★★★ உற்பத்தியில் வெல்லும் தொழிற்குழு!

உங்களுக்கான உற்பத்தியில், எங்களுக்கான வாய்ப்புகள்!

உங்கள் ஆர்டர்களுக்கு அழைக்கவும்

98439 96559
96778 03445

டாப்ஸ்

நைட்டி

சுடிதார்

பிளவுஸ்

தொழிற்குழு தலைவி: **மலர்விழி**
நிறுவனம்: **மங்கை தொழிற்குழு**
உற்பத்தி: **ஆடை தைத்தல்**
ஊராட்சி: **அஷோகாபுரம்**
வட்டாரம்: **பெரியநாயக்கன்பாளையம்**
மாவட்டம்: **கோயம்புத்தூர்**

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் · TAMIL NADU RURAL TRANSFORMATION PROJECT

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு
(044) 434 43200 tnrtpstate@gmail.com www.vkp-tnrtp.org VKPTNRTP VKP_TNRTP VKP_TNRTP

RNI NO .TNTAM/1999/02733 - TAMIL NADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS.1569 / 2023
Reg.No. TN/CH/(C)/455/2024-2026 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2024-2026
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th April 2024 Posted at Patrika Channel, Egmore.

நேரத்தை வீணாக்காதீர்கள்,

TNULM
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

உங்களால் முடியும்!
சாதித்துக் கொண்டே இருங்கள்!!

வீட்டு வேலை செஞ்சடைம் போக மற்ற நேரத்துல என்ன செய்றதுன்னு தெரியாம இருந்த எங்களுக்கு, Skill Training ஒரு உதவியா அமைஞ்சது. நாலு மாத பயிற்சி எடுத்துக்கிட்டு, நாங்களே சுயமா தொழில் செய்றோம். கணிசமான நிரந்தர வருமானம் கிடைக்குது!

மேலும் விவரங்களுக்கு

வாழ்வாதார உதவி அழைப்பு எண்
155 330 ல் தொடர்பு கொள்ளவும்